www.tamilarangam.net

தந்துதவியவர்: தேசம்நெற்

The EelaBhoomi

U.K. 40p Germany: 2.00DM, France: 5FF Swiss: 2SF, Canada: 1.25Ca$


# ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஆண்டு 1 வாரம் 10 22-02-92 சனிக்கிழமை

## புலிகளைத் தனிமைப் படுத்த சர்வதேசிய ரீதியில் இந்தியா முயற்சி

சர்வதேசிய அளவில் விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்தும் நோக்குடன் மிக்வும் வேகமாகச் செயற்பட்டு வருகிறது இந்திய அரசு. அண்மையில் ரா ஜீவ் கொலை வழக்கில் மிக முக்கிய சந்தேகநபர்கள் எனக் இந்திய அரசால் கருதப்படும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரனும் அவரது சகா பொட்டு அம்மானுக்கும் சரணடையும் படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. இவ் அறிவிப்பைத் தொடர்ந்து இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யவும் சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.



வே.பிரபாகரன்



பொட்டம்மான்

எதிர் வரும் ஏப்பிரல் நடைபெற உள்ள வழக்கின்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# யாழ்நகர் மீது விரைவில் தாக்குதல் இராணுவம் தயார் நிலையில்

(எம்.எஸ்.சலீம்)

**முதல் கட்ட நடவடிக்கையான குண்டு வீச்சுத் தாக்குதலைத் தொடர்ந்து தாக்குதல்கள் முற்றாக நிறுத்தப்பட்ட போதும் அடுத்தகட்ட நடவடிக்கையான தரைமார்க்க தாக்குதலுக்கு அரசு தயாராகிவிட்டது. பாரிய அளவு இராணுவ படைக்கலன்களுடன் ஒரிரு தினங்களுள் வரலாறு காணாத யுத்தத்துக்கு அரசு தயாராகிவிட்டது.**

பலமாதகாலமாக அரசினால் திட்டமிடப்பட்டு வந்த யாழ் நகர் மீதான தாக்குதல் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும் சமிக்ஞைகள் தென்படுகின்றன. முதல் கட்ட ஆகாயத் தாக்குதலை அடுத்து தரைமார்க்க தாக்குதலை முடுக்கிவிட அரசு தயாராகி விட்டது என்று நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதலுக்கு முன் எச்சரிக்கையாக யாழ் நகரெங்கும் துண்டுப் பிரசுரங்களை விமானம் மூலம் போட்டுள்ளது. மக்களைக் கோயில்களுக்கும், வேறு பாதுகாப்பு இடங்களுக்கும் செல்லுமாறு கோரும் இந்தத் துண்டுப்பிரசுரத்தை அடுத்து இதே போல குண்டுகள் பொழிய வாய்ப்புக்கள் இருப்பதாக பரவலாகப் பேசப்படுகிறது.

பதட்டத்தின் மத்தியில் யாழ் நகர் மக்கள் போர்காலத்தில் தங்களைச் சமாளித்துக் கொள்ளத் தேவையான உணவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க, ஒரிரு தினங்களுக்குமுன் எமக்குக் கிடைத்த தகவலின் படி கடந்த செவ்வாய் கிழமை வரையில் படைகளினால் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள் தமக்கு வெற்றியளித்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். எப்படிப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்க மறுத்து விட்டார். ஆனால் இராணுவ நடவடிக்கைகள் வெகு விரைவில் மேற்கொள்ளப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

## இராணுவத் தீர்வுக்கு நாமும் தயார் - மாத்தையா

இராணுவத் தீர்வை முன் வைக்க நினைத்தால் நாம் அதற்குத் தயாராக இருக்கிறோம். யாழ் குடா நாட்டைக் கைப்பற்றுவது என்பது பகற் கனவு. நாம் எத்தனை பெரிய தாக்குதலையும் எதிர் நோக்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார் புலிகளின் உப தலைவர் மாத்தையா என்று அழைக்கப்படும் மகேந்திரராஜா.

யாழ் குடா நாட்டுக்குப் படைகளை அனுப்புவதைக் காட்டிலும் அரசு பௌத்த குருமாரையும் நல்லெண்ணத் தூதுக்குழுக்களையும் அனுப்புவது நல்லது. கூடவே எம்பிக்கள் யாராவது வருவதாக இருந்தால் அவர்களை நாம் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் கொலை தொடர்பாக பிரபாகரனுக்கும் பொட்டம்மானுக்கும் சரணடைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது போன்ற இராஜதந்திர நடவடிக்கைகள் எமக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இனி ஏற்படப் போவதுமில்லை. 90 ஜூனிலிருந்தே புலிகள் எந்த ஒரு வெளிநாட்டிலோ அன்றி அந்நிய அமைப்பிலோ தங்கியிருப்பதில்லை என்று தீர்மானித்து விட்டார்கள். புலிகளுக்கு எதிரான இந்திய- இலங்கை அரசுகளின் கூட்டு முயற்சி நீண்ட காலமாகவே உள்ளது. இவை இலங்கைக்கோ அல்லது இந்தியாவுக்கோ பயன் தரப்போவதில்லை. சர்வகட்சி மாநாடு ஆரம்பித்து இரண்டரை வருடங்களாகி விட்டது. எதிரிக்குழுக்களும் எந்த வித பாதிப்பையும் எமக்கு அளிக்க முடியாது என்று அவர் அண்மையில் யாழ் நகரில் தெரிவித்துள்ளார்.

இது இவ்விதமிருக்க, யாழ்ப்பாணம் சென்று வந்த பத்திரைகையாளர் ஒருவர் யாழ்

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## அகதிகள் வருகையை கட்டுப்படுத்தும் புதிய சட்டமூலம் வாபஸ்

(காயத்திரி கொன்ஸ்டன்ரைன்)

இங்கிலாந்தில் அரசியல் புகலிடம் கோரும் அகதிகளுக்கு எதிரான புதிய சட்டமூலங்கள் நிறைவேற்றப்படுவதில் புதிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. இதன் விளைவாக அப் புதிய சட்டமூலத்தில் இருந்து பல முக்கிய விடயங்கள் நீக்கப்படும் அல்லது தவிர்க்கப்படும் என பிரித்தானிய அமைச்சரவையினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்புதிய சட்டமூலம் திருத்தங்கள் இன்றி நிறைவேற்றப்படுமாயின் தற்போது தற்காலிக அனுமதியின் கீழ் தங்கியிருப்பவர்கள் பலர் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவதற்கான உத்தரவுகள் உடன் பிறப்பிக்கப்பட்டிருக்குமென தெரிவிக்கப்பட்டது. ஆனால், லண்டனில் இருக்கும் அகதிகள் நலன் புரிச் சங்கங்கள், கிறிஸ்தவ ஆலயத் தலைமைக் குழுக்கள், ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் பிரிவுகள் தெரிவித்த கடுமையான எதிர்ப்பினால் அரசாங்கம் அகதிகள் தொடர்பான தனது நிலையை தற்போது முழுமையாக மாறியுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக நிறைவேறும் சட்டமூலத்தில் பின்வரும் மாற்றங்களைச் செய்ய கன்சவேட்டி அரசு ஒத்துக் கொண்டுள்ளதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் அறிவிக்கின்றன.

1) அகதிகளாக விண்ணப்பிப்போர் தொடர்ந்தும் சட்ட உதவிப்பணம் கோரலாம்,

2) அகதிகளை நாட்டிற்குள் கொண்டுவரும் விமானங்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டாது,

3) வீட்டுக் கந் தோரின் தீர்ப்பை எதிர்த்து மறு முறையீடு செய்யலாம்,

தற்போது பிரான்ஸ் நாட்டிலுள்ள பெரும்பாலான தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வசிப்பிற்கான அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன. லண்டனில் நான்கு வருடங்களுக்கு மேலாக அகதிகளாக வாழும் அனைவருக்கும் பூரண அகதிகள் அந்தஸ்து வழங்கப்படுவதுடன் அவர்கள் தங்கள் குடும்பத்தை இங்கு அழைப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தற்போது அனைத்து அகதிகள் நலன் புரிச் சங்கங்களும் மத பீடங்களும் முன்வைத்துள்ளன.

அகதிகளுக்கு தற்போது கிடைத்திருப்பது ஒரு இடைக்கால வெற்றியே. இதை நிரந்தரமாக்குவதற்கு அனைத்து தமிழ் அகதிகளும் இலண்டனில் நடைபெறும் அகதிகள் தொடர்பான நடவடிக்கைகளில் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்று அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் முக்கிய பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

## சட்டம் ஒழுங்கை புலிகள் பேணுகின்றனர் புலிகளின் சர்வ தேசச் செயலாளர் அறிக்கை

மனித உரிமைகள் மீறல் தொடர்பாக வெளிவந்த செய்திகள் தொடர்பாக தனது விளக்கத்தை அளித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலாளர்.

கடந்த வருடம் புரட்டாதி மாதமும் இவ்வருடம் தை மாதமும் அம்னஸ்டியினால் வெளியிடப்பட்ட அறிக்கைகளையும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான பிரிவின் இலங்கையில் காணாமல் போனவர்கள் பற்றிய (தற்சமயம் த்யாராகிக் கொண்டிருக்கும் அறிக்கை) அறிக்கையையும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகளையும் கவனத்திற்கு எடுத்துக் கொண்ட செயலாளர் இது பற்றி பத்திரிகைகளுக்கு தனது கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது, மனித உரிமைகள் மீறல் தொடர்பான எமது கருத்தை நாம் சுட்டிக் காட்ட விரும்புகிறோம். வடக்கும் கிழக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது உண்மை என்றாலும் , வடக்கு கிழக்கு மாகாணங்களில் முழு இடங்களிலும் நாம் பூரண கட்டுப்பாட்டை கொண்டிருக்கவில்லை. சில இடங்களில் எமது கட்டுப்பாட்டுகள்குள் இருக்கும் இடங்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றது என்று கூற முடியாது.

சில இடங்களில் இது நாளுக்கு நாள் மாற்றம் அடைவதையும் நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டும். மேலும் எமது பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் இடங்களில் கூட இருக்கும் கட்டுப்பாட்டினை ஒரு அரசாங்கம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் இடத்துடன் ஒப்பிட்டுவிட முடியாது. நாம், கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இடங்களில் சிவில் நிருவாகத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

## பஞ்சாப் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வெற்றி

(இந்தியா)

பஞ்சாப் மாநிலத்தில் நடந்து முடிந்த தேர்தல் ஆளும் கட்சிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளது. 117 தொகுதிகளில் இடம்பெற்ற தேர்தலில் 87 தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி வெற்றியீட்டியுள்ளது. இது தவிர பாராளுமன்றத்திற்கு 13 ஆசனங்களையும் காங்கிரஸ் கட்சி தட்டிக் கொண்டது. இந்தத் தேர்தலைப் பகிஸ்கரிக்கும் படி பஞ்சாப் தீவிரவாத இயக்கம் உத்தரவு பிறப்பித்திருந்தது அறிந்ததே. இதனால் 28 வீத மானோரே வாக்களித்தனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

## உள்ளே ▷

மேலைத்தேய.......
எதிர்காலம்...........
எண்ணியதை......
ஒரு வாரச் செய்திகள்..
புதியதோர் உலகம்....
தத்தெடுத்தவர்....
இன்னும் பல

அனைத்து செய்திகளையும் தாங்கிவரும் ஒரு தனித்துவமான பத்திரிகையே ஈழபூமி

www.tamilarangam.net



The EelaBhoomi

ஈழபூமி

The Weekly Tamil Newspaper in Europe

ஈழபூமியின் ஏட்டில் இருந்து...

ஆண்டு 1 வாரம் 10 18-02-1992

# பிரிவுக்குள் பிரிவு

பிரதேசவாதம் என்கின்ற பிள்ளை கருத்தரிக்க காரணமானவர்கள்யார் என்பது எமக்குத் தெரியாது. ஆனால் அந்தப் பிள்ளையயை வளர்த்தெடுத்தவர்கள் யார் என்பது எங்கள் எல்லோருக்குமே தெரியும். யாழ்ப்பாணம்- வன்னி என்று கூச்சலிடுவோர் ஒருபுறம் மட்டக்களப்பு - யாழ்ப்பாணம் என்று தம்பட்டம் அடிப்போர் ஒருபுறம் நின்று வளர்த்து விட்ட இந்தப் பிள்ளை இன்று எம்மண்ணிலே பிசாசு உரு எடுத்து எல்லோர் மனதிலும் ஊறிப்போகும் அளவுக்கு ஊட்டச்சத்துக் கொடுத்து வளர்த்து விட் டவர்கள் எம்மவர்.

எமது சமுதாயத்தில் இந்தப் பிரதேச வாதம் ஒரு பிரச்சனையாக இருக்கப்போகிறது என்று அன்று புரிந்திருக்க நியாயமில்லை. ஆனால் இன்று போராட்டம் உக்கிரம் அடைந்துள்ள இவ் வேளையிலே ஊர் வெறி கொண்டு அலையும் உத்தமர்களைப் பார்க்கும் போதுதான் வேதனை மிகுந்த எம்சமுதாயம் கண்களில் படுகின்றது.

ஒருவருக்கு தான் பிறந்து வளர்ந்த இடத்தின் மீதான சிந்தனையையும் உணர்வையும் பாராட்ட வேண்டும். அது தவறில்லை. ஆனால் அது வெறியாக இருந்து இன்னொரு ஊரை துச்சமாக மதிக்கின்ற அளவுக்கு மாறும் உணர்வு இருக்கலாமா? என்பதே இங்கு எழுப்பப்பட வேண்டிய கேள்வியாகும்.

ஆயிரம் ஆயிரம் மைல்களுக்கப்பால் வந்து கூட எம்மவர்கள் பிரதேசவாதத்தினை காவித் திரிகிறார்கள் என்பதை நாம் சாதாரணமாகத் தட்டிக் கழித்து விட முடியாது. இங்கு யாரையும் தனிப்பட்ட முறையிலே விமர்சிப்பது அல்ல எமது நோக்கம், அவர்கள் சமுதாயத்தில் தம்மைப் பெரிய மனுசர்களாக காட்ட முனையும் அதே சமயம் ஊர்வெறியை ஊட்டி வயிறு வளர்ப்பதைத்தான் நாம் விமர்சிக்க விளைகிறோம்.

அண்மையில் வெளிவந்த இரண்டு நூல்கள் பிரதேசவாதத்தை அப்பட்டமாக ஆதரித்து நிற்கின்றன. நாம் எம்மிடையே இருக்கும் பாரிய முரண்பாடுகளைத் தீர்க்க முற்படும் கால கட்டத்தில் ஊருக்கு ஊர் போட்டி போட்டு பிரதேச வெறியை ஊட்டிவிடுவது எமது போராட்டத்திற்கு நாம் இழைக்கும் கொடுமை என் பதனை எவரும் மறந்துவிடக் கூடாது.

வியாபாரத்தை நோக்காகக் கொண்டு சமுதாயத்தை விலைபேசும் நூல்களை நாம் நிராகரிக்கப் பழகிக் கொள்ளவேண்டும். சொந்த நலன்களுக்காக பொது நலனை அடகுவைக்கும் படைப்பாளிகளை நாம் பாராட்டி ஆதரிக்க முற்படக்கூடாது. இவர்கள் இருக்கும் ஒற்றுமையையும் உடைக்கப்பிறந்தவர்கள் என்பது ஒவ் வொரு சந்தர்ப்பத்திலும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும்.

காலம் காலமாக ஊட்டப்பட்ட வெறி தணியும் வேளையில் பிரிவுக்குள் பிரிவைக் காட்டி பிளவின் மேல் பிளவை உருவாக்கி உருப் பெருக்கும் மூன்றாந்தரப் பிரைஜைகளை நாம் திறந்த கண்ணோட்டத்தில் நோக்க வேண்டியது அவசியம்.

நாம் தமிழீழ மக்கள். தமிழீழத்தின் ஒவ்வொரு மூலையில் பிறந்தவர்களும் சமானமானவர்களே. ஒரு இடத்திலே பிறந்தவருக்கு வீரம், இன்னொரு இடத்திலே பிறந்தவருக்கு கல்வி, மற்ற இடத்திலே பிறந்தவருக்குப் பணம் என்று நாம் சந்திச் சண்டியன் போல் வீரம் பேச தமிழீழம் ஒன்றும் சரஸ்வதிசபதம் படமல்ல. நாம் அனைவரும் தமிழீழ மக்கள். நாம் யாவரும் சமம் என்ற உணர்வை மக்களிடம் வளர்க்க உங்கள் ஆக்கங்களைப் படையுங்கள். இனிமேலாவது உங்கள் அறியாமையை அகற்றிக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

# பெற்றுஎடுத்தவர் யாரோ... என்னை தத்து எடுத்தவர்..

'நெய்யுடை அடிசில் மெய்பட வியர்த்தும் மயக்குறு மக்களை இல்லிலோர்க்கு பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே'

இது சங்க காலத்திலே அரசனாக இருந்த அதே வேளை புலவனாகவும் இருந்த ஒருவரின் பாடலில் வரும் ஒரு பகுதி. நெய்யுடன் கூடிய சோற்றினை அள்ளி உண்கின்ற போது அதனை மேனியெல்லாம் கொட்டிஅலம்பி தளர் நடை போட்டுவரும் இன்பத்தை அள்ளித்தரும் மக்களை அதாவது பிள்ளைகளை கிடைக்கப்பெற்ற இல்லத்தாருக்கு குறை என்று பயங்கொள்ள எதுவும் கிடையாது என்பது இதன் பொருள்.

'ஒடி வருகையிலே கண்ணம்மா என் உள்ளம் குளிருதடி-நீ ஆடித் திரிதல் கண்டால் உன்னைப்போய் ஆவி தளுவுதடி"

என்று கூறினான் பாரதி. சின்னஞ்சிறு வயதிலே மது அருந்தியவர்களைப் போல ஓடி வருகையிலே அவனது உள்ளம் குளிர்ந்தது-அந்தச் சின்னஞ்சிறியது ஆடித் திரியும் போது காண்கையிலே அவன் ஆவியே அந்தச் சிறிய குழவியை கட்டித் தளுவுகிறது என்று.

'குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதார்"

இது வள்ளுவன் சொன்னது. புல்லாங்குழலின் இனிமை ஐயகோ என்ன இனிமை அது என்று கூறுவோரும் வீணையில் இருந்து வருகின்ற நாதம் தரும் இனிமை இந்த உலகிலே கிடைக்கப் பெறாத இன்பமன்றோ என்று சாற்றுவோரும் தங்கள் குழந்தைகளின் பொக்கு வாய்களில் இருந்து வரும் மழலைச் சொற்களைக் கேளாதவர்கள் என்பது அதன் கருத்து.

ஆனால் இது எல்லோராலும் பெற்றுவிடக்கூடியதாக இருக்கிறதா? இந்தச் சனியன் பிறந்ததால் வாழ்கைக்கையை அனுபவிக்க முடியவில்லை என்று முணுமுணுக்கும் பெற்றோர் ஒருபுறம் எங்களுக்கு ஒரு குழந்தையைக் கொடுக்க மாட்டாயா என்று ஏங்கும் பெற்றோர் இன்னொரு புறமும் உலகிலே வாழும் குடும்பங்கள் ஏராளம். ஆபிரிக்காவிலே லட்சக்கணக்கான பிள்ளைகள் உணவில்லாமல் பட்டினி கிடக்கிறார்கள். அவர்களது மழலைச் சொற்களைக் கேட்பதற்கு அவர்களுடைய பெற்றோருக்கு முடியாது. பசியிலே காத டைத்துப் போயிருக்கும் அவர்களுக்கு எப்படி மழலையை சுவைக்கும் சிந்தனை வரக் கூடும்.

ஐரோப்பாவிலே எத்தனையோ குழந்தைகள் குப்பைத் தொட்டிக்குள் உதயமாகிறார்கள். பாரதத்திலும் புராணக் கதைகளிலுமே காணக்கூடியதாக இருக்கும் குப்பைத் தொட்டிப் பிள்ளைகள் நவ காலத்திலும் இருக்கிறார்கள். பிள்ளைக்காக தவம் இருப்பவர்கள் ஒருபுறமிருக்க பெற்ற பிள்ளையை குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுப் போகும் பேர்களும் இங்கே ஏராளம் பேர் இருக்கத்தான் செய்கிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் ஆச்சரியம் என்னவென்றால் வருடம் ஒன்றிற்கு ஆயிரக்கணக்கான குழந்தைகள் உலகெங்கிலும் விற்பனையாகிறார்கள். பெற்றெடுத்தவன் யாரோ என்னைத் தத்தெடுத்தவன் யாரோ என்ற பாட்டை ஞாபகத்திற்கு கொண்டு வரும் இந்த நிகழ்ச்சி பற்றி சில தகவல்களைப் பார்ப்போம்.

**கொரியா வியட்னாம் யுத்தம் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகளை விற்கும் நிலைக்கு கொண்டுவந்து விட்டது.**

பிள்ளைகளைத் தத்தெடுத்து வளர்க்கும் முறை அதிகரித்த காலம் என்று கூறுவதனால் இரண்டாம் உலக யுத்த காலப்பகுதியைக் கூறலாம்.



ச. இராசையா

லண்டனின் கிழக்குப் பகுதியில் இருந்து பெருந்தொகையான பிள்ளைகள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டுள்ளன. இரண்டாம் உலக யுத்த காலப்பகுதியில் இங்கேயே பிள்ளைகள் அதிகமாக விற்கப்பட்டார்கள்.

கொரியா-வியட்னாம் யுத்தம் சுமார் 120000 பிள்ளைகளை விற்கும் நிலைக்கு கொண்டு வந்து விட்டது. இவர்கள் பல நாடுகளிலும் இருந்து வந்த வளர்ப்பு பெற்றோரிடம் வளர்கிறா ர். வயது வந்த பெற்றோர் அதாவது இனி பிள்ளை பெற்றுக்கொள்வது இயலாது என்றாகி விட்ட பெற்றோர் எழுபதுகளின் நடுப்பகுதியில் பிள்ளைகளை வாங்கி வளர்க்கும் முறையைக் கைப்பற்றத் தொடங்கினார்கள்.

உத்தியோகபூர்வ கணக்கெடுப்பின் படி சுமார் 22,000 பிள்ளைகள் தங்கள் சொந்த நாட்டை விட்டு ஒவ்வொரு வருடமும் வெளியேறுகிறார்கள். இது இரண்டு மடங்காகவோ அன்றி மூன்று மடங்காகவோ கூட இருக்கலமாம் என்று நம்பப்படுகிறது.

கடந்த இருபது வருட காலப்பகுதியில் மட்டும் அமெரிக்கா 140,000 பிள்ளைகளைத் தத்தெடுத்துள்ளது. இதில் 58 வீதமான பிள்ளைகள் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த பிள்ளைகளாகும். 28 வீதமான பிள்ளைகள் ஆசிய நாடுகளில் இருந்து தத்தெடுக்கப்பட்டவை. இதில் ஆச்சரியம் என்னவென்றால் அண்மைக்காலங்களில் ஆசிய நாடுகளிலும் பிற நாட்டுப் பிள்ளைகளைத் தத்தெடுக்கும் முறை வளர்ந்து கொண்டு வருகிறது.

மிகுதி 14 வீதமும் ருமேனியா, தூர கிழக்கு நாடுகள், போலண்ட்,எதியோப்பியா,லெபனான் போன்ற நாடுகளில் இருந்து பெறப்பட்டவை.

பிரித்தானியாவில் வருடம் ஒன்றிற்கு சுமார் 600 பிள்ளைகள் தத்தெடுக்கப்படுகின்றன. தற்பொழுது ரஸ்யா, அல்பேனியா,யூகேசிலாவியா போன்ற நாடுகளில் இருந்து பெருமளவான பிள்ளைகள் தத்தெடுக்கப்படுகிறது.

பின்வரும் தகவல்கள் பிள்ளைகள் தத்துக்கொடுக்கும் விபரங்களையும் தத்தெடுக்கும் விபரங்களையும் காட்டுகின்றன.

தத்தெடுக்கும் நாடுகளும் எண்ணிக்கையும் (1990)


கனடா -209
அமெரிக்கா -7,088
நெதர்லாண்ட்- 830
பெல்ஜியம் -877
பிரான்ஸ் -2,945
டென் மார்க்- 470
நோர்வே - 564
பிரித்தானியா- 600
சுவிற்ஸர்லாந்து - 509
ஜேர்மனி -1,290
இத்தாலி- 2,419
அவுஸ்ரேலியா -305
நியுசிலாந்து -791


பிள்ளைகள் விற்கும் நாடுகள் (ஆனால் தற்சமயம் தத்தெடுப்பது கடினம்)

ருமேனியா -5000
தென் கொரியா -3,231
பிலிப்பைன்ஸ் - 677
பராகுவே -303

பிள்ளைகள் தத்துக்கொடுக்கும் நாடுகள்

மெக்சிக்கோ - 236
கயிட்டி -199
கொலம்பியா -2,297
பிறேசில் -2,076
குவாத்தமாலா -342
கொண்டுராஸ் -214
எல் சல்வடோர் -166
பெரு - 816
சிலி - 859



(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# தமிழ் - சிங்கள மக்கள் ஒற்றுமையாவது எப்படி

## - கருத்தரங்கு

சமாதானத்தை நோக்கி என்ற தலைப்பில் கடந்த 15 ஆம் திகதி ஒரு கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளது. திரு.பழ. நெடுமாறன் கலந்து கொண்ட இந்தக் கருத்தரங்கு லண்டன் பல்கலைக்கழக, ஸ்கூல் ஒவ் ஒறியன்ரல் அன்ட் ஆபிரிக்கன் ஸ்ரடீஸ் என்ற பிரிவில் நடாத்தப்பட்டது.

சுமார் 160 பேர் அளவில் கலந்து கொண்ட இந்தக் கருத்தரங்கு சர்வதேச தமிழர் சம்மேளனத்தினால் மற்றும் பல பொது நல ஸ்தாபனங்களின் உதவியுடன் நடாத்தப்பட்டது. இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமாதானத்துடனும் சுதந்திரத்துடனும் எப்படி வாழலாம் என்பது பற்றி ஆராய கூடிய இக் கருத்தரங்கில் பலரால் தயாரிக்கப்பட்ட திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட்டது.

இக் கருத்தரங்கில் பல முடிவுகள் எடுக்கப்பட்டது. ஒரு நாள் முழுவதும் நடந்த இந்தக் கருத்தரங்கில் பற்றிய விபரமான அறிக்கையை அடுத்த ஈழபூமியில் பிரசுரிதக்க உள்ளோம் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

அருட்சோதி..................
10ம்பக்கத் தொடர்ச்சி


புலிகளுக்கு எதிராக தமிழ் நாட்டில் செயற்பட்டதாகவும், இவருக்கு ஆயுதத்துடன் கூடிய பாதுகாப்பு தமிழக பொலிசாரினால் கொடுக்கப்பட்டிருந்ததாகவும் நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க," துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார் அருட்சோதி. அண்மைக்காலங்களில் அவர் உடல் நலம் குன்றிக் காணப்பட்டார். சில வேளைகளில் புத்திசுவாதீனம் அற்றவராகவும் காணப்பட்டார். இதற்கு மேல் இதில் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை என்று சென்னை பொலீசார் தெரிவித்துள்ளனர். அருட்சோதி இந்திய உளவுப் படைக்கு வேலை செய்ததை அறிந்த புலிகளே இவரைக் கொலை செய்தனர் என்று தமிழகப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இக்கொலையை இந்திய உளவுப் படையினரே மேற்கொண்டிருகலாம் என்று அருட்சோதியுடன் நெருங்கிய தொடர்புடைய ஈரோஸ் உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்

# ஈழத் தமிழரிடையே ______

# மேலைத்தேய ஓவியம்



மார்க்கு





வின்சர் ஒவியக் கழகத்தின் வருகை புடைப்புச் சாதனத்தைப் பொறுத்த வரையிலும் ஒரு புரட்சியே செய்தது எனலாம். அது வரை செல்வாக்குப் பெற்றிருந்த பென்சில் கலர் எண்ணை வர்ணத்தினால் மாற்றீடு செய்யப்பட்டது. கித்தானும் இக்காலத்திலேயே பிரதான படைப்புச் சாதனமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

வின்சர் ஒவியக் கழகம் இரு ஒவியச் சந்ததிகளைத் தந்தது. மூத்த சந்ததியில் வந்தவர்கள்தான் நாம் கண்ட இராசையாவும் கனகசபாபதியும். இளைய சந்ததிகளில் வந்தவர்களில் முக்கியமானவர்கள் தற்போது வடக்கு ஒவிய வித்தியாதரிசியாக விளங்கும் ஆ.தம்பித்துரையும் க.இராசரத்தினமும் ஆவர். இப்படியாக ஈழத் தமிழரிடையே ஒரு புதிய ஒவியக்கலை பாரம்பரியத்திற்கு வித்திட்ட வின்சர் ஒவியக் கழகம் எஸ்.ஆர்.கே. இன் மறைவுடன் தானும் மறைந்து விட்டது. இதன் பின் சில காலம் கனகசபாபதியின் முயற்சியினால் சிலகண்காட்சிகள் அவ்வப்போது நடைபெற்று வந்திருந்தாலும் 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற கலை விழாவுடன் அதுவும் நின் று போயிற்று. ஈழத்து ஒவிய வரலாற்றில் எஸ்.ஆர்.கே, யின் மறைவு ஏற்படுத்திய வெளி இன்னமும் நிரப்பப்படவில்லை. அன்னாரது ஆளுமை வீச்சினையும் நிர்வாகத்தினையும் நிகர்க்குமளவிற்கு இன்னொருவர் தோன்றாதது எமது அவப்பேறே.

இது ஒருபுறமாக நடந்து கொண்டிருந்த அதே வேளை எம்.எஸ். கந்தையா என்பவர் தனது நண்பர்களுடன் இணைந்து 1957 இல் விடுமுறைக்கால ஒவியக் கழகம் என்ற பெயரில் ஒரு ஒவியக் குழுவை நடாத்தி வந்தார். இக்காலத்தில் அ.மாற்கு என்பவரும் இவர்களுடன் இணைந்திருந்தார். மாற்கு கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் ஒவியம் கற்றவர். தற்போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒவிய ஆசிரியராக இருக்கின்றார். இவரும் இவரது நண்பர்களிம் நவீன ஒவியத்தின் பால் ஈடுபாடும் அதை வளர்த்தெடுக்கும் ஆர்வமும் கொண்டிருந்தனர். இவர்களும் ஒவிய வகுப்புக்களையும் கண்காட்சிகளையும் நடத்தினர். இக்கழகம் வின்சர் ஒவியக்கழகத்தைப் போல் பரந்த அடிப்படைகளில் இயங்

பயிற்றுவித்தல், பரீட்சித்தல் உடன் நின்று விடாது ஆசிரியர்களுக்கான விடுமுறைக்கால் மீட்டல் வகுப்புகளையும் இக்கழகத்தினர் வெவ்வேறு பிரதேசங்களிலும் நடத்தி வந்தனர்.

இது வின்சர் ஒவியக் கழகத்தின் செயற்பாடுகளின் ஒரு பக்கம். அதன்மறுபக்கம் இளம் ஒவியர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், நவீன ஒவியம் மீதான அவர்களின் அறிவைப் பெருக்குமுகமாகவும் கண் காட்சிகளை ஒழுங்கு செய்தல்.

அக்காலத்தில் புகழ் பெற்ற ஒவியர்களின் அதே அளவிலான தரமான பிரதிகளை கொழும்புக்குத் தருவித்து கண் காட்சிகள் பல நடாத்தப்பட்டு வந்தன. இப்பிரதிகளை எஸ்.ஆர்.கே. தமிழ் பிரதேசங்களுக்கும் தருவித்து ஒவியக்கலை ஆவலர்களின் எதிர்பார்ப்புக்களைப் பெரிதும் நிறைவேற்றினார். அத்துடன் நில்லாது, தமிழ் ஒவியங்களின் படைப்புக்களை ஏனைய பிரதேசங்களுக்கும் கொண்டு சென்று கண் காட்சிகளை நடாத்தினார்.

இதைத் தொடர்ந்து 80 களின் ஆரம்பங்களில் மாற்கு செ. சிவப்பிரகாசத்துடன் சேர்ந்து ஒவியவகுப்புக்களை நடாத்தி வந்தார். சில காலம் இணைந்து இயங்கிய இவர்கள் 1987 ஆம் ஆண்டு பிரிந்து தனித்தனியாக ஒவியப்பயிற்சி அளித்து வந்தனர்.

(2) எந்த ஒரு மாற்றமும் எதேச்சையாக நிகழ்வதில்லை. ஒரு துறையின் வளர்ச்சி அல்லது தேக்கம் ஏற்பட அது சார்ந்திருக்கும் சமூக அரசியல் பின்புலத்தில் ஏற்படும் மாற்றமே அடிப்படையாக அமைகிறது.

புதிய கல்வி முறையின் வருகை பிரசார வசதிகள், இதனால் ஏற்பட்ட சமூக மாற்றம் மதத்தையும் அரசையும் அண்டி நின்ற ஒவியக் கலையின் சமூகமயப்பாடு அந்நியக் கல்வி முறையினால் ஆரம்பித்த ஒன்றல்ல. பல்வேறு வகைகளில் பல்வேறு மட்டங்களில் இது ஏலவே ஆரம்பித்திருந்தது. அந்நியக் கல்வி முறையின் வருகையால் இம்மாற்றம் துரிதப் படுத்தப்பட்டது. அதைவிட ஒரு அசுர பாய்ச்சல் கண்டது எனக் கூறலாம்.

இது சிங்களவரிடையேயும் தமிழரிடையேயும் ஏற்பட்ட பொதுவான மாற்றம். ஆனால் வின்சர் ஒவியக் கழகத்தின் ஸ்தாபகத்திற்கும் அதன் செயற்பாடுகளுக்கும் பிறிதொரு ஊக்கியும் இருந்தது. அதுவே எஸ்.ஆர்.கேக்கும் சிங்கள கலைஞர்களுக்கும் இடையிலான தொடர்பும் அதன் வாயிலாக அவர் பெற்ற அரச அனுசரணையும்.

(தொடரும்)

சட்டம்..........................
1ம்பக்கத் தொடர்ச்சி

உண்மையில், தமிழ் மக்களின் போராட்டமானது சொல்லொணாத் துயரங்களின் மத்தியில் தான் இடம் பெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் போராட்டமானது சட்ட ரீதியான போராட்டமாகும். ஒரு புறத்தில் ,ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ் பிரதேசங்களை ஆக்கிரமிக்க முனையும் அதே வேளை தமிழ் மக்கள் மீது திட்ட மிட்ட கொலை வெறியை நடாத்தி வருகிறது. விமானப் படை ஈவிரக்கமற்ற குண்டுத்தாக்குதலை நடாத்துகிறது. மறுபுறத்தில் பொருளாதாரத் தடையை விதித்து தனது இராணுவ நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய நினைக்கிறது. மீண்டும், புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் இடங்களுக்கு சோயா உணவுப் பொருட்கள், இனிப்பு வகைகள் எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. இது தேசிய பாதுகாப்பிற்கு பங்கம் ஏற்படுத்தும் என்றதன் பேரிலேயே இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஈழத்தின் எல்லைப் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள். சிங்கள, முஸ்லிம் ஊர்காவல் படைகள் அரசினால் பயிற்றுவிக்கப்பட்டு ஆயுதம் வழங்கப்பட்டுள்ளார்கள். குடியேற்றப்பட்டவர்கள் மீதும், ஊர்காவல் படைகள் மீதும் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் பொது மக்களைக் கொலை செய்ததாக சிலவேளைகளில் திரித்துக் கூறப்படுகிறது. சில தமிழ் குழுக்கள் அரச படைகளுடன் இணைந்து செயற்படுகிறார்கள். இவர்கள் இரசியத் தகவல்கள் சேகரிப்பதற்காக புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் இடங்களுக்கு அனுப்பப்படுகிறார்கள். எனவே இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களை கைது செய்வதோ, அன்றி தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதோ எமக்கு அவசியமாகிறது.

இத்தனைக்கும் மத்தியில் நாம் சிவில் நிருவாகத்தை உருவாக்கி வருகிறோம். சிறு கைத்தொழில், விவசாயம், மீன் பிடி போன்ற துறைகளில் முன்னேற்றம் காண இது உதவியுள்ளது. கல்வி, கலாச்சாரத் துறைகளில் கூட கவனம் எடுத்துள்ளோம். தேவையானஅளவு சட்டத்தை நிர்வகிக்கும் யந்திரங்கள் முடுக்கி விடப்பட்டுள்ளன. சிறைச் சாலைகள் நிர்வகிக்கப்படுகின்றன. கைதிகளைப் பார்வையிடுவதற்கு உறவினர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கைதிகள் உள்நாட்டு, மற்றும் சர்வதேச சட்டங்களுக்கு இணங்கவே பராமரிக்கப்படுகின்றனர்.

நகரபாதுகாப்பு நிலையங்களை நிறுவியுள்ளோம். அங்கு மக்கள் தமது முறையீடுகளைப் பதிவு செய்யலாம். அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. தண்டனைகளைப் பொறுத்த வரையில் அடிப்படை நீதி பின்பற்றப்படுகிறது. விரைவில் நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.

புலிகள் உலக மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட ஒரு அமைப்பு. நாம் ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க கடமைப்பட்டுள்ளோம். சர்வ தேச சட்டத்திற்கிணங்க தனது போராட்டத்தை முன்னெடுப்பதில் புலிகள் அமைப்பு எப்பொழுதும் கவனத்தை எடுக்கும் . போராட்ட விதிகளை மீறுபவர்கள் உரிய தண்டனைகளுக்கு உள்ளாவார்கள் .

இந்த அறிக்கை இம்மாதம் 18 ஆம் திகதி புலிகளின் லண்டன் கிளை நிறுவனத்தில் இருந்து பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தக்

VINAYAKAR STORES

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உணவுப் பொருட்கள் பழைய புதிய ஒடியோ கசட்டுக்கள், **Compact Disk**, நவநாகரீக நகைகள் இன்னும் உங்களுக்குத் தேவையான சகல விதமான பொருட்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

VINAYAKAR STORES
169 Tooting High Street
London
SW17 OSY

TEL : 081-672 8202

# பயிற்சியிலிருந்து தப்பிய இராணுவத்தை பலியாக்கும் அரசு - சுதந்திரக் கட்சி பா. உ

(கொழும்பு)

இலங்கை இராணுவ பயிற்சி முகாம்களில் இருந்து தப்பியோடிய சுமார் 3000 இராணுவ பயிற்சியாளர்களை தேடிப் பிடித்து உயிர் பலி கொடுக்க அரசு முனைகிறது என்று சுதந்திரக் கட்சி பா.உ ஒருவர் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய இவர் கூறியதாவது, அரசு தேவையில்லாமல் மக்களைப் பலி கொடுக்கிறது. இராணுவத்தில் சேர்க்கப்பட்டவர்களை யாழ் கொண்டு சென்று பலியிடுகிறது. தப்பியோடிய 3000 பேரையும் பிடித்து இவ்வாறு பலியிட நினைக்கிறது அரசு.

# ஒருபுறம் அரசு ஒருபுறம் புலிகள் சிக்கித்தவிக்கும் மக்கள் - ஈ. பீ. ஆர். எல். எவ்

ஆனையிறவுக்கு மேற்குப் பக்கமாக உள்ள குடாநாட்டுக்குச் செல்லும் பாதையை படையினர் மூடிவிட்டதனால் குடா நாட்டு மக்கள் மிகவும் பாதிக் கப்பட்டுள்ளனர் என்று பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார். ஒருபுறம் புலிகளும் மறுபுறத்தில் அரச படைகளும் என சிக்கித் தவிக்கின்றனர் மக்கள் என்று கூறினார் பாராளுமன்றத்தில் இடம் பெற்ற அவசர கால சட்ட நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்ட ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு க.பிரேமச்சந்திரன். அவசரகால சட்ட நீடிப்பு விவாத முடிவின் போது ஈ.பி.ஆர். எல்.எவ். தவிர்ந்த ஏனைய தமிழ்க்குழுக்களின் பா.உ.கள் அரசிற்கு சார்பாக வாக்களி

# தொண்டமானின் (பகல்) கனவு!

இலங்கை அரசியல் கொந்தளிப்பில் கடந்த மூன்று மாதமாக வீசிய 'தொண்டமான் சமாதானத் தென்றல்' தற்பொழுது ஓய்ந்துவிட்டது. அரசியலை நுணுக்கமாக ஆராய்பவர்களும், இலங்கை அரசியல் நிலைமையை சரியாகப் புரிந்துள்ள எவரும் இம்முயற்சி வெற்றியளிக்கும் என்று துளி கூட எதிர்பார்த்திருக்கவில்லை. தொண்டமான் 28 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு போவார், 10 ஆம் திகதி போகிறார் என ஜோசியம் கூறிய கிளிச்சாத்திர பத்திரிகையாளர் எல்லோரும் இம்முயற்சி தோல்வி அடைந்ததற்கான காரணங்களைச் சரிவர ஆராயாமல் ஓடி மறைந்துவிட்டனர். தமது இன வெறி அரசியலை ஆரம்பிக்க நல்ல தருணம் தேடிக்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய, சுதந்திரக் கட்சி பா.உ.

எனவே கடந்த மூன்று மாத காலமாக மேற்கொள்ளப்பட்ட இந்தச் சமாதான முயற்சியின் போது மேற்கொண்ட இனவெறி, மத வெறி போன்ற அம்சங்களை தவிர்த்து, மற்றைய முக்கிய காரணிகளை ஆராய்வது பொருத்தமாயிருக்கும்.

*மலையகத் தமிழர்களின் வாக்குப்பலம்.*

மலையகத் தமிழ் பேசும் மக்களுக்கு வாக்குரிமை கொடுத்ததன் மூலம் அவர்களின் அபிலாசைகளுக்கும், உரிமைகளுக்கும் ஓரளவாவது செவிசாய்க்க வேண்டிய கட்டாயம் தற்போது அரசிற்கு ஏற்பட்டுள்ளது. தற்போது அமுலில் உள்ள ஜனாதிபதி முறையிலான தெரிவிற்கு

நாடுகளினால் குறிப்பாக நோர்வே, சுவீடன் போன்ற நாடுகளினால் மேற்கொள்ளப்பட்ட பல சமாதான முயற்சிகளுக்கு தடைபோட்டன. எங்களுடைய முக்கிய தமிழ் அமைச்சர், ஒருவரின் சமாதனத்திட்டம் தற்போது பரிசீலனைகளில் உள்ளது என காரணம் காட்டி பல ராஜதந்திர சமாதானத்

**எழுபத்தொன்பது வயது நிரம்பிய தொண்டா ஓய்வு பெறும் போது சாதனை நிலை நாட்ட எண்ணியிருக்கிறார்**

தொடர்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

றையாக வரையறுக்கப்பட்ட இத்திட்டத்தில் வட-. கிழக்கு மாகாண முஸ்லிங்களைப் பற்றி குறிப்பிடாததையிட்டு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் திரு அஸ்ரப் தனது கடும் எதிர்ப்பை தெரிவித்ததை இங்கு குறிப்பிட வேண்டும். தொண்டமானினால் இவ் யோசனைத் திட்டத்திற்கு புலிகளும் ஒரு செயற்கையான முக்கியத்துவத்தை கொடுத்தனர். இதன் விளைவாக

புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா தொண்டமானிற்கு அனுப்பி வைத்த கடிதம் அவரை மிகவும் குஸிப்படுத்தி விட்டது. இதனைத் தொடர்ந்து தொண்டமான் பல முன்னணி அரசியல் வாதிகளையும் குழுக்களையும், சில முக்கிய நபர்களையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். தனது சமாதான

டாயம் இருக்குமென்ற அபிப்பிராயம் , தொண்டமானிடம் முதலில் ஏற்பட்டதை சில உள் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன. ஆனால் யதார்த்தம் இதற்கு நேர் மாறாக இருந்தது. உண்மையில் இச் சமாதான திட்டத்திற்கும் புலிகளுக்குமிடையில் எந்தவொரு தொடர்பும் இல்லையென்பதும் இது வேறொரு அரசியல் சிந்தனை உடையவர்களின் அனுசரணையுடன் எழுதப்பட்டது எனவும் பின்னர் தெளிவாகியது. எனினும் இச் சமாதான திட்டத்தில் (இரண்டாவதாக சமர்ப்பிக்கப்பட்ட) வைத்தியரின் யோசனைகள் முக்கியமாக இருந்ததாக அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

**சிவசிதம்பரத்தின் அன்றைய பேச்சு தொண்டாவுக்கு எவ்வளவு சரியாகப் பொருந்தியுள்ளது**

*வரலாற்றில் இடம் பெற அவா*



அலங்கரித்த அரசியல் பதவிகள் சிங்கள இனவெறி உணர்வின் முன் எவ்வளவு போலியானது என்ற உண்மை புலப்படும். ஸ்ரீலங்காவில் ஒரு தமிழன் அமைச்சராக இருந்தால் என்ன, மதத்தலைவராக இருந்தால் என்ன பெரிய முதலாளியாக இருந்தால் தான் என்ன சிங்கள தேசிய வாதம் தலைதூக்கும் போது அனைத்து தமிழர்களும் வெறும் மசிர்தான். ஆளும் ஐ.தே. கட்சினுள் நேற்றுவரை விலாசமறியாத டிக்கிரி பண்டாவும், சோமபாலாவும் அக்கட்சியின் முக்கிய அமைச்சரை பதவி விலகும்படி கோசமிடும் யாருக்காவது தமிழர் பிரச்சனை அவ்வாறு தீர்க்கப்படல் வேண்டும் என்ற திட்டம் இருக்கிறதா.... அல்லது அந்த உணர்வாவது இருக்கிறதா?? 1986 ஆம் ஆண்டில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சனை தொடர்பான விவாதமொன்று நடைபெற்று இதில் ஸ்ரீ லங்கா அரசின் சார்பில் இன்றைய ஜனாபதியின் வெளிநாட்டு ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோனும் தமிழர்களின் சார்பில் முன்னாள் நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு சிவசிதம்பரமும் தலைமை வகித்தனர். இவ்விவாதத்தில் பிரட்மன் வீரக்கோன் உரையாற்றும் போது 'கொழும்பில் தமிழர்கள் வாழவில்லையா? டி.ஐ.ஜி., எஸ்.பி. போன்ற அதி உயர் பாதுகாப்பு பதவிகளை தமிழர்கள் வகிக்கிறார்களே.... நிலைமை இப்படியிருக்க நீங்களெல்லாம் ஏன் தனிநாடு என கோசமிடுகிறீர்கள் என சிவசிதம்பரத்தைப் பார்த்து கேட்டார். இதை பொறுமையாக செவிமடுத்த சிவசிதம்பரம் மிகவும்

# எண்ணியதை எண்ணியபடி முடிக்கிறேன்

**— காயத்திரி கொன்ஸ்டன்ரைன் —**

ஜினதாஸ நியத்தபாலா, சர்வோதயத்தலைவர் ஆரியரத்ன ஆகியோர் ஆளுக்கோர் தமிழ் எதிர்ப்புக் கட்சிகளை ஆரம்பித்து விட்டனர். இந்த ஆரவாரங்கள் ஒரு புறமிருக்க, திடீரெனக் கத்தோலிக்கத் துறவிகளைக் கொண்ட குழுவொன்று வடபகுதிக்கு சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொண்டுள்ளனர். இவ்யாத்திரையின் போது இவர்கள் மாத்தையா, பாலசிங்கம், யோகி, ஆகியோருடன் பல மணி நேரம் உரையாடியதுடன் திருப்தி வேறு தெரிவித்துள்ளனர். தொண்டமான் தனது சமாதான முயற்சியை ஆரம்பித்தவுடன் 'ஐயோ, இந்தியாக்காரன் நாட்டை பிளவு பண்ணுகிறான் என்று ஓலமிட்ட பௌத்த குருமார்களுக்கு இனி ஐயோ கிறிஸ்தவர்கள் நாட்டை பிளவு பண்ணுகிறார்களென கதற பல நாட்கள் செல்லாது.

**புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா தொண்டாவுக்கு அனுப்பிவைத்த கடிதம் அவரை மிகவும் குசிப்படுத்தியது.**

அமைச்சர் தொண்டமானின் சமாதானத் தீர்வு முயற்சி தோல்வி அடைந்ததன் அடிப்படை காரணிகளை ஆராய முற்படுவோமாகில் சிகையலங்காரக்காரனின் குப்பையைக் கிழற மயிர் மயிராக வந்த கதை போல் தான் இதுவும் முடிவடையும். இலங்கைப் பாராளுமன்றத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, களனிய பல்கலைக்கழக உபவேந்தர் வண . வாப்பொல ராகுல தேரோ, முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய, .லங்கா பௌத்த சம்மேளனத் தலைவர்களின் பேச்சுக்களை விரிவாக ஆராய்ந்தால் இன வெறியும் மத வெறியுமே இத்தோல்விக்கு அடிப்படைக் காரணம் என்பது தெளிவா

மலையகத் தமிழ் பேசும் மக்களின் வாக்கு மிகவும் அவசியமானது.

இவ்வாக்குப்பலம், பல சிங்கள அரசியல் வாதிகளை திருப்தியடைய வைத்துள்ளது.

கடைசியாக இடம் பெற்ற பொதுத் தேர்தலின் போது ஜனாதிபதி பிரேமதாஸவை **King** எனவும் தொண்டமானை **King Maker** எனக் கூட சில பத்திரிகைகள் வர்ணித்திருந்தன. எனவே மலையகத் தமிழ் பேசும் மக்களின் ஒட்டு மொத்தமான வாக்குப் பலம் சில வேளைகளில் ஆட்சியைக் கைப்பற்ற முக்கிய அம்சமாகி விடுகின்றது. **(Balance of Power)** இதனால் மலையக மக்களின் ஒட்டுமொத்தமான அபிப்பிராயத்தை முக்கிய சிங்களக் கட்சிகள் தமக்குக் கொடுக்கப்பட்ட சாபமாக கணிக்கின்றன. இந்த ஒரே காரணத்திற்காக தான் சமாதானம் வேண்டும் என உணரும் ஒரு சில அரசியல் வாதிகள் கூட தொண்டாவின் சமாதான முயற்சியை மௌனமாக எதிர்த்து நின்றனர். எனவே பேச்சுவார்த்தைக்கென புலிகளையும் அரசையும் இணங்க வைத்தாலே தொண்டமான் ஒரு பெரும் சாதனையைப் புரிந்தவராக் கணிக்கப்படுவார். இதை நிச்சயமாக எந்த ஒரு முக்கிய சிங்கள அரசியல் கட்சியும் ஜீரணிக்கப் போவதில்லை.

**பேச்சு வார்த்தைக்கென புலிகளையும் அரசையும் இணங்க வைத்தாலே தொண்டமான் ஒரு பெரும் சாதனை புரிந்தவர் எனக் கணிக்கப்படுவார்.**

*வெளிநாடுகளின் சமாதான முயற்சிக்கு முற்றுப் புள்ளி.*

தொண்டமானின் இம்முயற்சி நடைபெற்றுக்கொண்டி

தொண்டமானின்சமாதான முயற்சி தோல்வியில் முடிந்த இவ்வேளையில் வரும் காலங்களில் திரு மங்கள முனசிங்காவை தலைவராகக் கொண்ட பாராழுமன்றத் தெரிவுக்குழு சாட்டாக கூறப்பட்டு பல பல சமாதான முயற்சிகளுக்கு தடை போடட்டும். எந்த சமாதானத் திட்டங்களும் சர்வ கட்சி பாராளுமன்ற தெரிவுக்குளுவின் பரிசீலனைக்கு வைக்கப்படுமென்ற போர்வையின் கீழ் காலம் கடத்தப்படும். அதே வேளையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாரிய அளவில் இராணுவத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும். இது தவிர்க்க முடியாத உண்மை. இதற்கு தெரிந்தோ, தெரியாமலோ எமது தமிழ் குழுக்களும் அரசிற்குத் துணை போகின்றன.

*தொண்டாவின் மாமா வேலை*

ஆரம்ப கட்டத்தில் சமாதானத் திட்டமென கூறுமளவிற்கு தொண்டமானிடம் ஒன்றும் பொருட்டாக இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக புடுங்கியெடுத்த சில கோரிக்கைகளே இவர் சமர்பித்த முதலாவது திட்டமாகும். இவ்வாறு அரைகு

முயற்சியின் விளைவாக ஏற்படும் பாரிய விளைவை உணராமல் தனது திட்டத்தில் எவ்வளவு தூரம் குருட்டுத் தனமான நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை அவர் அப்போது பத்திரிகைகளுக்கு கொடுத்த பேட்டிகளே சான்றாகும். தொண்டமானின் குருட்டு நம்பிக்கைகள் உச்சகட்டத்திலிருந்தபோது யாழ் வைத்திய சாலையில் மிகவும் நற்பெயருடைய வைத்தியர் ஒருவர் சில சமாதான யோச

னைகளுடன் தொண்டமானை அணுகியுள்ளார். இந்த யாழ் வைத்தியர் மிகவும் பிரபல்யமானவர் என்பதால் இவருடைய யோசனைக்கு புலிகளின் ஆதரவு அல்லது புலிகளின் அனுசரணையாவது கட்

இவ் சமாதான கதை அடிபட தொடங்கிய நாளிலிருந்தே தொண்டமானின் அடிமனதில் ஒரு ஆதங்கம் இருந்ததை பலர் அவதானித்திருப்பார்கள். தற்போது 79 வயதாகிவிட்ட தொண்டமான் அரசியலை விட்டு ஓய்வு பெறும் போது ஒரு பெரிய சாதனை ஒன்றை தனியாக நிலை நிறுத்தி விட்டு செல்வதில் மிகவும் உறுதியாக இருக்கிறார். இதைத் தொண்டமானே பல சந்தர்ப்பங்களில் தன்னையறியாமல் வெளிப்படுத்தியுள்ளார். 'எனக்கு 79 வயது தாகிறது. என்னைக் கடைசிவரை எக்காரணம் கொண்டும் புலிகள் பணயக்கைதிகளாக்கமாட்டார்கள்' என பேட்டிகளில் கூறியதும் '79 வயதில் நான் மரணிப்பதைப் பற்றி அஞ்சவில்லை', என அஸ்ரப் பிற்கு கூறிய பதிலும் இதை வெளிப்படுத்துகின்றது. தனது மிக நீண்ட அரசியல் பொது வாழ்வில் இறுதியில் ஆப்பிளுத்த குரங்கின் கதை போல் தானே அதில் சிக்குண்டு தவிக்கிறார்.

**ஸ்ரீ லங்காவில் ஒரு தமிழன் அமைச்சாராக இருந்தாலென்ன பெரிய முதலாளியாக இருந்தாலென்ன,மதத் தலைவராகத்தான் இருந்தாலென்ன சிங்கள தேசிய வாதம் தலை தூக்கும் போது அனைத்து தமிழர்களும் வெறும் மசிர்தான்**



*பொதுவான பாடம்.*

ஒரு கணம் அமைச்சர் தொண்டமான் சாய்வு நாற்காலியில் ஓய்வாக அமர்ந்து நடந்து முடிந்த அனுபவத்தை அசை போட்டுப் பார்த்தால், அவர் முக்கிய அங்கம் வகித்தாக நினைத்த கட்சியினரின் இனவெறி உணர்வு, முக்கிய பிரமுகர்களின் பகடை வேஷம் தமிழ் பேசும் மக்களின் உரிமை பற்றி பௌத்த தலைமைப் பீடத்தின் உதாசீனம் போன்ற பல உண்மைகள் அவர் மனத்திரையில் நிழலாடும். அதிலும் குறிப்பாக தான் இதுவரைகாலமும்

அழகாகக் கூறினார். இவ்வளவு உயர் பதவிகள் வகித்த தமிழர்களினால் கூட தனது

**ஆய்வுக் கட்டுரை**

வீடு சூறையாடப்பட்டு எரிக்கப்படுவதையும், தனது மனைவி மானபங்கப்படுத்தப்படுவதையும் தடுக்க முடியவில்லையே ' என்றார். சிவசிதம்பரத்தின் அன்றைய பேச்சு இன்று தொண்டமானுக்கு எவ்வளவு சரியாக பொருந்திவிட்டது. இன்னும் எவ்வளவு பேருக்கு இது பொருந்தப் போகிறதோ !!!..

**இலங்கை அரசியல் கொந்தளிப்பில் கடந்த மூன்று மாதமாக வீசிய தொண்டமான் சமாதானத் தென்றல் தற்போது ஓய்ந்து விட்டது. அரசியலை நுணுக்கமாக ஆராய்பவர்களும் இலங்கை அரசியல் நிலைமையை சரியாகப் புரிந்துள்ள எவரும் இம் முயற்சி வெற்றி அளிக்கும் என் துளிகூட எதிர்பார்த்திருக்கவில்லை**

www.tamilarangam.net

# எதிர் காலம் எப்படி இருக்கும்?

இலங்கையில் இன்ப்பிரச்சனை இன்னும் ஓயவில்லை. தமிழீழப் போராட்டம் ஏதோ ஒரு வகையில் நடந்து கொண்டிருக்கிறது. நாட்டில் எந்தப் பாக்கத்திலும் அமைதி இல்லை. இந்த வகையில் அகதிகளைத் திருப்பி அனுப்ப இந்தியா முடிவெடுத்ததும் ஏற்கெனவே அகதிகளை இலங்கைக்கு திருப்பியனுப்பியதும் பெரும் விந்தையாக இருக்கிறது.

உள்நாட்டில் யுத்தம் முடிவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. பேச்சு வார்த்தை முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. இந்த நிலையில் திருப்பி அனுப்பப்படும் அகதிகளின் எதிர்காலம் எப்படி இருக்கும் . நாட்டின் பிரச்சனைகள் என்ன வடிவத்தை எடுக்கும் என்று கேள்விகளை எழுப்பி விடை காண முயல்கிறார் ல்ண்டன் பி.பி.சியின் இலங்கைக்கான நிருபர் சிறில் மொறிஸ். இலண்டனில் ஒலிபரப்பாகும் வேள்ட் ருடே (இன்றய உலகம்) தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனத்தின் தலைவர் எஸ்.ஸி.சந்திர காந்தன், இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், தமிழ் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், சிங்கள ஆரக்ஸய சங்கிவிதானய அமைப்பின் தலைவர் காமினி ஜயசூரிய,கொழும்பு கொள்கை திட்டமிடல் நிறுவனத்தைச் சேர்ந்த தயான்ஜயதிலக, ஆகியோருடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் இவரது கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்கள்.

## பீ.பீ.சி உலக சேவைக்கான இலங்கை நிருபர் சிரில் மொறிஸ் பிரபாகரன் உட்பட பல பிரமுகர்களுடன் பேட்டி

தமிழகத்தில் இருக்கும் அகதிகள் இரண்டும் கெட்டான் நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு என்ன நடக்கும் என்று யாருக்குமே புரியாத நிலை தோன்றியுள்ளது. அகதிகள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்று இந்தியா வற்புறுத்துவதும் அவர்களை தாம் வரவேற்கத் தயாராக இருக்கிறோம் என்று இலங்கை அரசும் கூறிக்கொண்டிருக்கின்றன. இலங்கை இந்திய கூட்டு முயற்சியில் இலங்கை அகதிகள் இரண்டு இலட்சம் பேரையும் இலங்கை திருப்பி அனுப்பப்டுவதற்குரிய முழு ஆயத்தங்களும் நடைபெற்றுள்ளன. இன்னும் சில வாரங்களில் மொத்தம் முப்பதாயிரம் பேர் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள். இதற்கான ஒழுங்குகள் ஏற்கெனவே முடிந்தாயிற்று.

தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது பாதுகாப்பானதல்ல. என்று கூறுகின்றார் தமிழகத்தில் உள்ள அகதிகளின் புனர் வாழ்வு சங்கத்தின் தலைவர் சந்திரகாசன். பெரும்பாலான அகதிகள் இலங்கையில் ஒரு சுமுகமான நிலை தோன்றிய பின்னரே

### அகதிகளைத் திருப்பியனுப்புவது பாதுகாப்பானது அல்ல ......சந்திரகாசன்

நாடு செல்ல விரும்புகிறார்கள் என்று குறிப்பிடுகிறார். இவர் ஒரு கேள்விக்கு மேலும் விளக்கிக் கூறுகையில் ஈழம் உருவாகவேண்டும் அல்லது ஒரு அரசியல் தீர்வு சாத்தியமாக வேண்டும் அதன் பின்னரே இவர்கள் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல விரும்புகிறார்கள் என்று கூறுகிறார்.

இந்த நிலையில் திருப்பி அனுப்பப்படும் அகதிகளுக்குப் பாதுகாப்பு மட்டும் வழங்கப்படும் ஏன்று இலங்கை அரசு திருப்பித் திருப்பிக் கூறுகின்றது. அகதிகள் திரும்பி வருவதே எப்போதும் அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது என்கிறார் ஜனாதிபதியின் ஆலோசகர் வீரக்கோன். இவர் அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பான கோள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் மேலும் கூறுகிறார், அவர்கள் வர விரும்பினால் வரலாம். அவர்களுக்கு இந்த நாட்டில் மற்ற பிரஜைகள் போல வாழும் உரிமை உண்டு. அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை நாம் வழங்குவோம் என்று. இன்று இலங்கை இருக்கும் சூழ் நிலையில் அகதிகளை திருப்பி அனுப்புவதை எவரும் ஆதரிக்கவில்லை. தமிழ் குழுக்கள் சிலவும் இந்தக் கருத்தையே கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இந்தியாவிலிருந்து தமிழ் மக்களை திருப்பி அனுப்புவது ஒரு மலிவான பிரச்சார தந்திரம் என்று கூறுகிறார் குமார் பொன்னம்பலம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் அகதிகள் இருக்கிறார்கள். இலங்கையில் உள்ள அகதிகளில் பலர் திருகோணமலை வவுனியா மன்னார் போன்ற இடங்களுக்குத் திரும்ப செல்ல முடியாத நிலையில் உள்ளனர். இங்கிருக்கும் அகதிகளே ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்ல முடியாமல் இருக்கின்றார்கள் என்றால் இந்தியாவிலிருந்து வரும் அகதிகளுக்கு பாதுகாப்பு உண்டு என்று கூறுவது கேலிக்கூத்தானது என்று விபரிக்கிறார் குமார் பொன்னம்பலம்.

அண்மைக் காலங்களில் இராணுவ ரீதியிலான மாற்றங்களை விட அரசியல் ரீதியிலான மாற்றங்கள் பல நடந்துள்ளன. தொண்டமானால் கொண்டுவரப்பட்ட தீர்வில் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் உள்ளடக்கப்படிருக்கிறது. புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் யாழ் நகருக்குள் செல்ல அவர் விரும்புகிறார் அதே நேரம் தென்னிலங்கையில் எழும் பிரச்சனைகளையும் சமாளிக்கலாம் என்று அவர் எண்ணுகிறாரா என்று வினாவிய போது, நிச்சயமாக இது ஒரு நோக்கம் என்று குறிப்பிடுகிறார் வீரக்கோன். அவர் மேலும் கூறும்போது, இம்மாதிரியான ஒரு தீர்வை முன் வைத்துவிட்டால் நிராகரிக்க முடியாத ஒரு சிக்கலான நிலைக்குப் புலிகளைத் தள்ளி விடலாம் என்று எண்ணுவதாக விளக்கினார். தெற்கிலுள்ள அரசியல் கட்சிகள், தமிழ் குழுக்கள், முஸ்லிம் கட்சிகள் எல்லோருமே ஒரு தீர்வை ஏற்றுக்கொண்டு விட்டால் புலிகளுக்கு இந்தத் தீர்வை எதிர்ப்பது கடினமாக இருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தொண்டமான் முன்வைத்த யோசனைகளில் வடக்கு கிழக்கு இணைப்பு, குடியேற்றங்களை மேற்கொள்ளும் உரிமை, வெளிநாடுகளில் கடன் வாங்கும் உரிமை, பிராந்திய பொலிஸ்படை போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. துரதிஸ்ட வசமாக இவை அனைத்தையும் கண்டிக்கின்றார்கள். பெரும்பான்மை சிங்கள மக்களின் தேசிய குழுக்கள் இதனை எதிர்க்கின்றன. சிங்கள மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சிங்கள ஆரக்ஷ சங்கிவிதான என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கு தலைமை வகிக்கிறார் முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரிய .நான்கு வருடங்களுக்கு முன்னர் தமிழ் பேசும் மக்களுக்கு அதிகார பரவலாக்கல் கொடுக்கப்படுவதை கண்டித்து ராஜினாமா செய்தவர். இவர் என்ன சொல்கிறார்.

தமிழர்களுக்கு என்று நிலம் ஒதுக்கப்படுவதை நான் கடுமையாக எதிர்க்கிறேன். இதனை நான் ஒருபோது ஏற்றுக்கொள்ளமாட்டேன். பாரம்பரிய பிரதேசம் என்று ஒன்று இருக்குமாயின் அதற்கு ஒரு எல்லை இருக்கும், அது காலப்போக்கில் இது தமிழ் பகுதி, இது சிங்களப் பகுதி என்று பிரித்து விடும். இது ஒரு போது இன உணர்வு விட்டுப் போவதற்கு வழி வகுக்காது. இன்றுள்ள பிரச்சனையை மறக்க இடமளிக்காது. இன விகிதாசாரப்படி கல்வி வழங்குவதையோ, வேலை வாய்ப்பு வழங்குவதையோ நான் முற்றாக எதிர்க்கிறேன்'.

பெரும்பாலான தமிழர்கள் இது ஜதார்த்தமானதல்ல என்று சிந்திக்கிறார்கள். ஏனென்றால் சமமின்மை காணப்படாதபோது தானே அவர்களது போராட்டம் ஆரம்பமானது. என்று வினவியபோது ஜயதிலக கூறுகிறார், இனவாதத்தை பரப்புவதில் உள்ளூர் பத்திரிகைகள் முக்கிய பங்கெடுக்கின்றன என்று குறிப்பிடுகின்றார். சிங்களவரான இவர் சிங்கள இனவாதத்தை திறந்த மனதுடன் கண்டிப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச கட்டுப்பாட்டில் இருக்கும் பத்திரிகைகள் குறிப்பாக சிங்களப் பத் திரிகைகள் இனவாதத்தை தூண்டிவிட்டன. 1983ற்குப் பின்னராவது, இதனைத் தெளிவாகக் காணலாம். பல்வேறு பிரச்சனைகளில் இனவாதத்தைத் தூண்டி விடக்கூடிய அளவுக்கு இப்பத்திரிகைகள் நடுநிலை தவறிச் செய்திகள் வெளியிட்டன. என்று மேலும் கூறுகிறார் தயான ஜயதிலக.

இதே விவாதத்தை நாம் மற்றப் பக்கத்திற்கும் திருப்பலாம். புலிகளுக்கு ஆதரவான பிரச்சார பாடல்களை யாழ்ப்பாணம் முழுவதும் ஒலி

### அகதிகள் திரும்பி வந்தால் அவர்கட்கு பாதுகாப்பு உண்டு ..ஆலோசகர்

காரணத்தை சிங்கள மக்கள் அங்கீகரிக்க வேண்டும். அதாவது தமிழரின் பாரம்பரிய பிரதேசம், தமிழ் தேசியத்துவம், தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, ஆகியவற்றை அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த அடிப்படைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் ஐக்கியம் நிலவக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளது என்று கூறுகிறார்.

அரசியல் நடவடிக்கைகள் தொடரும் அதே சமயம் இராணுவ நடவடிக்கைகளுக்கான வேலைகளும் நடந்துகொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்தை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதே படைகளின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. 10 இலட்சம் மக்கள் வசிக்கும் இந்தக் குடாநாட்டில் யுத்தம் நிகழ்ந்தால் அது படு மோசமானநாகவே இருக்கும். என்று ஏற்றுக்கொள்கிறார் தயான் ஜயதிலக. ஆனால் இப்போதுள்ள நிலையில் யாழிலிருக்கும் புலிகள் துரத்தப்பட்டால் அரசியல் தீர்வுகள் வரச் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன என்றும் கூறுகிறார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதை பெரும்பாலான சிங்கள மக்களும்,

### பாதுகாப்பு உண்டு என்பது கேலிக் கூத்தானது. ........குமார் பொன்னம்பலம்.

அரசுடன் ஆதரவான தமிழ் குழுக்களும் விரும்பாது என்று கூறும் ஜயதிலக தற்போது புலிகள் பலவீனப்பட்டுள்ளனர். இவர்களுடன் போர் புரிந்து அவர்களை விரட்டி அடிக்க வாய்ப்புக்கள் உண்டு என்று இராணுவத்தினர் நம்புகின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் வீழ்ச்சி அடைந்தால் கூட காட்டுக்குள் இருந்து கொண்டு புலிகள் தாக்குதல்களை நடாத்த தம்மை தயார் படுத்தி உள்ளனர். அது மட்டுமல்லாது அரசுடன் இணைந்திருக்கும் தமிழ் குழுக்கள் தமிழ் மக்களின் நம்பிகையைப் பெற்றிருக்கவில்லை. இத்தனைக்கும் மத்தியிலும் தீர்வைப் பரிசிலிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி குமார் பொன்னம்பலத்திடம் வினவிய போது, இாாணுவம் தான் முன்னிலையில் இடம் பெறும் என்று நான் நினைக்கிறேன். புலிகளுக்கும் இராணுவத்திற்குமான சண்டை தொடர்ந்தும் நடைபெறும். பாராளுமன்றத் தெரிவுக்குழு இந்த மோசமான நிலையை கவனமாகக் கூர்ந்து ஆராய்ந்து ஒரு முடிவை எடுக்க வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாஸ தன்னை ஒரு சமாதான விரும்பி என்று காட்டிக்கொள்ளும் அதே வேளை தீவிரமாகவும் சிங்கள தேசிய வாதத்திற்கு குரல் கொடுப்பவராகவும் இருக்கின்றார் என்று கூறுகிறார் குமார் பொன்னம்பலம்.

தொண்டமான் பிரேரணைகள் வெளியானதுடன் நான் சிங்கள ஆரக்ஷ இயக்கத்தைத் தொடங்கினேன் என்கிறார் காமினி. நித்திரையாக உள்ள சிங்கள மக்களைத் தட்டி எழுப்பவே இப்படி ஒரு அமைப்பை நிறுவினேன் என்கிறார் இவர். இந்தப் பிரேரணைகள் எந்த விதத்திலும் நாட்டிற்கு அமைதியைக் கொண்டு வராது. இரத்த ஆற்றை ஓடச்செய்திருக்கும் என்று குறிப்பிடுகிறார்.

இந்தப் பிரச்சனைக்கு ஒரு முடிவே இருக்காதா என்று கேட்டபோது சிலர் இல்லை என்று கூறினார்கள். இதற்கு ஜயதிலக அரசியல் கட்சிகள் இனவாதமற்ற ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். அது பிரச்சனைகளைத் தீர்க்க உதவும். நான் நினைக்கிறேன் இங்கு பெரிய பொருளாதாரப் பிரச்சனைகள் தலை தூக்கியுள்ளன. அரசாங்கத் தலைவர்களும், கொள்கை திட்டமிடுவோரும் இந்த யுத்தத்தில் இருந்து நாம் மீண்டு விட்டால் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடையும் அத்துடன் மக்கள் வாழ்க்கை செழிப்புறும் என்பதையும் நன்கு தெரிந்து வைத்துள்ளனர். இதன் மூலம் அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியும். இதனால் சொந்த நலனையே நோக்கமாக கொண்ட அரசியல் வாதிகள் சாதகமாக அமையக்கூடிய ஒரு தீர்வையே கொண்டுவருவார்கள்.

## இப் பேட்டி பீ.பீ.சியின் உலக சேவையில் வேள்ட் ருடே என்ற நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது

(கொலியஸ்வூட்) பொது மதுமனையில் மது அருந்தச் சென்ற ஒரு தமிழ் வாலிபன் வெள்ளை இனத்தவர்களினால் படு மோசமாகத் தாக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த வாலிபர் சில தினங்களுக்கு முன் கொலியஸ்வூட்டிலுள்ள ஒரு பொதுமதுமனையில் மது அருந்திக் கொண்டிருந்த சமயமே இப்படி மோசமாகத் தாக்கப்பட்டார்.

இது பற்றி எமக்குத் தெரியவருவதாவது, இவர் மாலை நேரத்தில் பப்பில் மது அருந்திக் கொண்டிருந்தாராம். அந்த வேளை அங்கு மது அருந்திக் கொண்டிருந்த சில வைள்ளை இனத்தவர்கள் அவரிடம் அநாகரீக முறையில் நடந்து கொண்டனராம். ஏன் இப்படி நடக்கின்றீர்கள் என்று வினவிய போது அந்த இளைஞர்கள் இவரைத் தாக்க ஆரம்பித்தனர். படு மோசமாகத் தாக்குண்ட நிலையில் இவர் அந்த இடத்தை விட்டு தப்பியோடிச் சென்றாராம். தப்பியோடி வீடு சென்ற இவர் ஒரு கூர்மையான கததியை எடுத்துக் கொண்டு மீண்டும் அந்த இடத்திற்கு போயிருக்கிறார். அப்போதும் அவர்கள் அங்கே நின்று கொண்டிருக்க இந்த இளைஞன் அவர்களை ஆங்கிலத்தில் ஏசினாராம். அச்சமயம் அவரைத் தாக்க முனைந்த போது அவர் வெள்ளை இனத்தவர்களை கத்தியால் குத்திவிட்டு தப்ப முனைகையில் அவர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட வேளையில் பொலிசாரிடம் கூறினாராம் 'நீங்கள் எங்கள் நாட்டிற்கு வந்தால் நல்ல மாதிரி நடந்து கொள்கிறோம். ஆனால் நீங்கள் ஏன் காட்டுமிராண்டிகள் போன்று நடந்து கொள்கிறீர்கள்' என்று. அதற்கு அந்த பொலிஸ் அலுவலகர் எல்லா வெள்ளையர்களும் அப்படி இல்லை என்று பதிலளித்தாராம்.

இந்த இளைஞன் அண்மையில்தான் இந்த நாட்டிற்கு வந்தார்


WEDDING ALBUMS

Professionaly Finished Photes

* Album design will be made as specified
* Negatives will be handed with the album
* Many enlarged prints
* Prices from £145.00 (All expences inclusive)

Money Will Be Refunded Incase Of Any Dissatisfaction

FOR ALL THE FUNCTION

Contact FAST fOTO

TEL: 081-503 4952

www.tamilarangam.net



புதியதோர்.....................
8ம் பக்கத் தொடர்ச்சி...

சந்திக்கும் சிவன்கோவிலில் இவனுக்காக அவர்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். பத்திரிகைகளைக் கொடுத்தவுடன் ஆர்வமாக அவர்கள் பெற்றுக் கொண்டு வழிந்தோடும் வியர்வையோடு மூசிரைக்கும் இவனை ஆயாசத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அந்த இளைஞர்கள் எல்லோருமே இருபத்தைந்து வயதிற்குட்பட்டவர்களாகவே இருந்தார்கள். எல்லோரும் சுத்தமான சாரமும் சேட்டும் அணிந்திருந்தார்கள். ஒருவர் மாத்திரம் அகன்ற தாடியை அடிக்கடி தடவிக்கொண்டிருந்தார். மறுநாள் நடைபெறப் போகும் உதை பந்தாட்டத்திற்காக ஒய்வெடுக்கும் வீரர்களின் அமைதியான பாவத்துடன் அவர்கள் மிக ஐக்கியமாக இருந்தார்கள். அவர்களுக்கு இம்மாதிரி கழக வேலைகளில் ஈடுபடுவதில் ஆர்வமும் இருந்தது. அதே சமயம் நாளாந்தம் வீடுகளில் இதற்காக முகம் கொடுக்கும் எதிர்ப்புக்களை வெல்வதற்கான சாதுரியமில்லாத இயலாமையும் இருந்தது.

நாதன் சேட் பட்டன் இரண்டை கழற்றி மெலிந்த அந்த உடல் வெளியே தெரிய காற்றோட்டத்தில் உடம்பை இதமாக்கிக் கொண்டு ஒவ்வொருவரின் முகத்தையும் தனித்தனியாக பார்த்துக் கூறினான்.

'பத்திரிகை நீங்கள் முதலில் படியுங்கள். விளக்கம் தேவையென்றால் உடனுக்குடன் தொடர்புகொண்டு கேளுங்கள். ஒவ்வொரு பத்திரிகைக்கும் காக கணக்கு தந்திட வேண்டும். பத்திரிகை விற்பதோடு மாத்திரம் இல்லாமல் அந்தச் சாட்டிலேயே மக்களுக்கு எங்கள் கருத்துக்களை பிரச்சாரம் செய்து தொடர்புகளை ஏற்படுத்துங்கள்'

பேசி முடிந்ததும் அவர்கள் முகங்களை ஏறப்பார்த்துக்கொண்டு வாயைச் சிறிது திறந்தபடி ஏதும் கேட்க நினைக்கிறார்களோ என்பது போல பார்த்தான். அவர்களும் அதே பாவத்துடன் சிரித்துக்கொண்டிருந்தார்கள்.

இவன் புறப்படத் தயாரான போது அவர்கள் 'சாப்பிட்டிட்டு போகலாம்.கொஞ்சம் இருங்கள்' என்று மறித்த போது இவன் 'வேண்டாம் நேரம் இல்லை. வேண்டுமானால் டீ குடிக்கிறேன்'என்று கூறவும் அந்த தாடிக்கார இளைஞன் எழுந்து சென்றான்.

வீடின்றி.........................
2ம்பக்கத் தொடர்ச்சி

தேடி மாத்தளைப் பகுதிக்கு வந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மற்றும் திருகோணமலையில் உள்ள கன்னியா,கிண்ணியா அன்புவழிபுரம் போன்ற இடங்களைச் சேர்ந்த மக்களே இவ்வாறு வீடு தேடி மாத்தளைப்பகுதிகளில் அலைவதாக அறிவிக்கப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களும் வயோதிபர்களும் ஆவர் என்று மேற்படி செய்திகள் கூறுகின்றன. இவ்வாறு வீடு தேடி அலையும் இவர்கள் வீடு கிடைக்காமையினால் கோயில்களிலும் தெருக்களிலுமே தங்கள் பொழுதைக் கழிக்கின்றார்கள். கோயிலில் கிடைக்கும் அன்னதானத்தை உட்கொண்டு விட்டு மீதி நேரங்களில் வீடு தேடி அலையும் இந்த மக்கள் பற்றி எவரும் கவனத்திற்கு எடுக்கவில்லை என்று சில தமிழ் பா.உ.கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# பிரதமரின் தீர்வு

(கொழும்பு)

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு முன் புலிகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டியது அவசியம் என்று கூறியுள்ளார் பிரதமர் விஜயதுங்க. இனப்பிரச்சனைக்கான தீர்வை புலிகள் ஏற்கும் வரையில் அல்லது அந்த நிலைக்குத் தள்ளப்படும் வரை பேச்சு வார்த்தை இல்லை என்றும் இராணுவத் தீர்வையே அரசு நாடுகிறது என்றும் கூறினார்.

இராணுவத்தின்...............
1ம்பக்கத் தொடர்ச்சி

குடாநாட்டின் மீது படை எடுப்பு நடந்தால் அது யாழ்ப்பாணத்தில் புலிகளின் மேல் அதிருப்தி உள்ள பலரை மீளவும் புலிகள் பக்கமே தள்ளிவிடக் கூடும் என்று கருத்து தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக சில கிராமங்களில் புலிகளின் மேல் அதிருப்தி கொண்ட மக்களைத் தான் சந்தித்ததாக அவர் சார்ந்த பத்திரிகை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றெடுத்தவர்...........
3ம்பக்கத் தொடர்ச்சி

போலண்ட் - 646
சீனா (ரிபெத்) -157
இந்தியா -1,371
இலங்கை - 740
தாய்லாந்து -395
எதியோப்பியா -200
மடகாஸ்கர் - 178
தென் சமோவா- 670
வியட்னாம்- 167

பின்வரும் நாடுகளில் ஒரு குழந்தைக்கான விலை (1990)

சிலி- 8,122
பெரு,பொலிவியா, பராகுவே - 7,328
ஈகுவடோர் -4,961
மெக்சிக்கோ- 4,225
இலங்கை -3,680
பிரேசில்- 3, 494
கொலம்பியா- 3,355
ரோமானியா -3,305
தாய்வான், சீனா -3,303
எல்சல்வடோர் -2,940
இந்தியா -2394
தாய்லாந்து வியட்னாம் -2341

இளங்கோவின்..............
8ம்பக்கத் தொடர்ச்சி

ஆறுதல் கிடைக்கும் போது அந்த ஆறுதல் யார் மூலம் கிடைக்கிறதோ அவர்களை ஆதரிப்பதை நாம் பூரண ஆதரவாகக் கருதிவிட முடியாது. தற்காலிகமாக பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்காக மக்கள் ஏற்கும் ஒரு இடைக்கால முடிவே அது. இல்லை என்று நீங்கள் வாதிடுவீர்களானால் வவுனியா மாவட்டத்தில் திருமதி புலேந்திரன் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக போட்டியிட்டு பா.உ ஆகவரவில்லையா? அப்படியானால் வவுனியாவில் இருக்கும் மக்கள் தமிழீழப் போராட்டத்தை நிராகரித்து விட்டார்கள் என்று அர்த்தமா? பிரச்சனைகளிலும், அடக்கு முறைக்குள்ளும் திண்டாடுகின்ற மக்களுக்கு இடையில் ஒரு ஆறுதல் கிட்டுமானால் அதனை அவர்கள் ஆதரிக்கவே செய்வார்கள். இராணுவம் தான் தீவுப் பகுதிகளில் நிற்கிறது என்பது தெரிந்தும் கூட யாழ் குடா நாட்டுக்குள் இருந்து மக்கள் புலிகளுக்குத் தெரியாமல் தீவுப் பகுதிகளுக்கு ஓடவில்லையா? இது எதனைக் காட்டுகிறது. ஒப்பீட்டளவில் எங்கே ஆறுதல் கிடைக்கிறதோ அங்கே மக்கள் ஆதரவு குறுகிய காலத்திற்கு கிடைப்பது தவிர்க்க முடியாதது. இந்த வகையிலே நீங்கள் குறிப்பிட்ட அமைப்புக்களுக்கும் ஆதரவு கிட்டியிருக்கலாம். (ஆயுத முனைகளிலே கிழக்கு மாகாண மக்கள், யாழ்ப்பாண மக்கள் வாக்களிக்க அழைத்துச் செல்லப்பட்டதை இந்த இடத்தில் மறந்து விடவேண்டாம்) இந்த வகையிலே மேற்சொன்ன அமைப்புக்களுக்கு ஆதரவு கிடைத்தது என்று நாம் எண்ணிக்கொள்வது தவறு என்றே நினைக்கிறேன்.

இனி உங்களின் ஒட்டுமொத்தமான விமர்சனத்துக்கு பதில் அளிக்கலாம் என்று எண்ணுகிறேன். எனது ஆய்வின் படி எந்த இடத்திலும் புலிகளின் செயல்களுக்கு வக்காளத்து வாங்கி எழுத முனையவில்லை. புலிகள் பற்றிய விடயத்தில் நான் தெளிந்த சிந்தனையைக் கொண்டிருக்கிறேன். புலிகளினால் தமிழீழம் கிடைக்கும் என்று இன்று மட்டும் நான் என்றுமே எண்ணியது கிடையாது. புலிகளின் ஜனநாயக விரோதச் செயல்களை எனது கட்டுரையில் தெளிவாகக் கூறியிருக்கிறேன். நான் மீண்டும் சிந்திக்க வேண்டும் என்று எழுதியது புலிகளுடன் கூட்டுச் சேர்வது பற்றியல்ல. அதனை நான் எனது கட்டுரையின் முடிவில் இதனைத் தெளிவாகக் கூறியுள்ளேன். புலிகளினாலும், ஏனைய இயக்கங்களினாலும் ஏற்பட்ட மோதல்கள் பாசிச நடவடிக்கைகள் போன்றவற்றினால் சிதறிப்போன சகல இயக்க உறுப்பினர்களும் சிந்தித்து அரசிடம் சரணடையாமல் மீண்டும் ஒரு உறுதியான இயக்கத்தைக் கட்டி எழுப்புவதற்குரிய வேலைத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்ற பொருள் படவே எனது கட்டுரையை முடித்திருந்தேன்.

நன்றி பாலன்.

# ஒன்பது வயதுத் தமிழ்ச் சிறுவன் வாகீசனின் சாதனை

இங்கிலாந்தின் ஜி.சி.எஸ்.சி (இலங்கையில் கா.பொ.தா சாதாரணம்) பரீட்சையில் கணித பாடத்தில் அதி திறமைச் சித்தியுடன் சித்தி பெற்றுள்ளார். ஒன்பது வயதே நிரம்பிய சிறுவன். லண்டனில் அதிகளவில் விற்பனையாகும் மாலைப் பத்திரிகையான ஈவினிங் ஸ்ராண்டட் பத்திரிகையில் புன்னகையுடன் தோன்றும் இச் சிறுவன் ரூட்டிங் பகுதியிலுள்ள புரோட்வோட்டர் பாடசாலை மாணவனவார். ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவபாத சுந்தரம் - அரசி தம்பதிகளின் மூத்த புதல்வனான வாகீசன் என்ற சிறுவனே தனது ஒன்பதாவது வயதில் உயர் தர வகுப்பில் கற்கும் தகுதியை அடைந்தவராவார்.

*ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை*
*சான்றோன் எனக் கேட்ட தாய்*

என்ற வள்ளுவன்வாக்சனை மனதில் வைத்துக் கொண்டுதானோ என்று சிந்திக்கும் அளவிற்கு திறமையை தன்னுள் அடக்கியிருக்கும் இந்தச் சிறுவனின் திறமையும் ஆற்றலும் அவரது பெற்றோருக்கு மட்டுமல்ல எமது சமூகத்திற்கே பெருமை தேடித் தரும் ஒரு வியக்கத் தக்க வல்லமையே.



# Maths whiz kid, 9, gets set to take A-level exam

by Bruce Kemble

A BOY of nine who has already won an A grade GCSE pass in mathematics is to start studying for his A-levels.

Teachers at Broadwater School, Tooting, realised that Vageesan Sivapathsundarum had a natural gift for maths after he joined the school three years ago.

Head teacher Denzil Shepherd said: "When he came here he said he liked to do maths at home. When we looked at the work he was doing it was very advanced." His work compares favourably with that of maths prodigy Ruth Lawrence, who now teaches at Harvard in America, and who passed her first GCE O level at the age of nine and her first A level when she was 10.

Mr Shepherd and Vageesan's class teacher, Cathy Reed, started giving the talented youngster extra tuition and last autumn it was agreed he could try for GCSE maths. Mr Shepherd said: "I have never met anybody who has done as well as this. He has a gift for mathematics but elsewhere in the curriculum he is just the average nice, bright nine-year-old."

Vageesan's mother, Arasi, 38, said she had been helping her son for some time, but although she was good at maths, her son had already outstripped her.

"We think he may get his ability from his grandfather who was a college principal. Vageesan says he wants to be an astronomer. He has a five-year-old sister but it's too early to say whether she is as bright as he is."

Vageesan has had an interview at a secondary school, Graveney Comprehensive, Wandsworth, where he may study with sixth-formers.

Mr Shepherd said: "It will be very difficult for him when he's studying with 17-year-olds."

புலிகளின்...............
1ம்பக்கத் தொடர்ச்சி

முடிவுகள் தமிழீழ விடுதலை பப்புலிகளின் எதிர் காலத்தை நிர்ணயிக்கும் என இந்தியாவிலிருந்து வெளிவரும் புரன்ட்லைன் சஞ்ஜிகை எதிர்வு கூறியுள்ளது. மேலும் இவ் வழக்கில் இவர்கள் இருவரும் குற்றவாளிகளாக காணப்படும் இடத்தில் பல வெளிநாட்டு அரசுகள் குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் தமது நாட்டில் உள்ள அலுவலகங்களை மூடிவிடும். இது நடைபெறாத சந்தர்ப்பத்தில் இந்தியா தலையிட்டு மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அது மட்டுமன்றி எதிர்காலத்தில் இலங்கை அரசுடன் இணக்கத்துக்கு வந்து பிரபாகரன் வெளியுலகில் நடமாடினாலும் அவரை விடப் போவதில்லை என இந்திய அரசு கங்கணம் கட்டியுள்ளது. இது மட்டுமன்றி இலங்கை அரசு குற்றவாளி பிரபாகரனுடன் எப்படி பேச்சு வார்த்தை நடாத்த முனையும், இதில் இலங்கை அரசு எந்த நிலையை கடைப்பிடிக்கும் என்பது இன்னமும் தெளிவாகத் தெரியாவிடினும் இலங்கை அரசு இவர்களின் வழக்கு விடயத்தில் தன் முழு ஆதரவையும் இந்தியாவுக்கு அளிக்கும் என உறுதி அளித்துள்ளது.

## தேவை:

மணமகன், மணமகள் தேவை போன்ற விளம்பரங்கள் சில குறிப்பிட்ட நிபந்தனையுடன் ஏற்றுக் கொள்ளப்படும். குறிப்பாக சீதனம், சாதி போன்றவற்றை கருத்தில் கொள்ளும் எந்த விளம்பரமும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

# கடந்த மாதம் மட்டும் நாற்பத்தைந்து இராணுவம் பலி

(கொழும்பு)

கடந்த மாதத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் மொத்தம் 45 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 20 ஆம் திகதி தை மாதம் பாராளுமன்றத்தில் பேசிய சுற்றாடல் அலுவல்கள் அமைச்சர் வின்சன் பெரேரா இதனைத் தெரிவித்தார். இவர் மேலும் தெரிவிக்கையில், படைகள் தவிர இரண்டு பொலிசார், மூன்று ஊர்காவல் படையினர், மற்றும் 33 பொதுமக்களும் கடந்த மாதத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

உங்கள் வீட்டில் நடக்கும் எந்த வைபவமாயினும் சரி உங்கள் விருப்பத்திற்கேற்ப நவீன தொழில் நுட்பத்துடன் வீடியோ படம் பிடித்துக்கொள்ள

**S.P & Sons Video Movie**
5,Lomond Close
Alperton
Wembley

மறக்கமுடியாத உங்கள் வீட்டு வைபவங்கள் என்றும் உங்கள் நினைவில் நிற்க....

081-903 2829
081-459 4161

கலையமுதம்
இருவார வீடியோ இதழ்

எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது.

www.tamilarangam.net



நாம் எல்லா இயக்கமும் போல் நடந்து கொள்ளத் தேவையில்லை. எமக்கென்று இருக்கும் கொள்கையிலும் எமக்கென்ற பாதையிலுமே போக வேண்டும். அதற்கான பதில்களையும் அவர்கள் ரகசியமாகப் பெற்றுக்கொண்ட பின்பும்தம்பாட்டுக்குள் முணு முணுத்துக்கொண்டே இருந் தார்கள்.

அதே போல் அந்த உத்தரவை மீறி கழகத் தோழர்கள் சிலர் வாகனங்களைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் இடைக்கிடை வந்துகொண்டே இருந்தது.

யார் செய்கிறார்களோ இல்லையோ அன்றிலிருந்து நாதனின் சகல பாவனைக்கும் பைசிக்கிள் தான்.

மதியத்திற்கு முன் அந்த வேலைகளை முடித்து திரும்பிவிட வேண்டும் என்ற அவசரத்தில் வேகமாக மிதித்தான். மாலையில் நிர்மலாவைச் சந்திப்பதாகக் கூறியிருந்தான். அதற்கு முன்னம் மாணவர் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மகளிர் அமைப்பு பாசறைக்கும் இடம் ஒழுங்கு செய்ய வேண்டும். அன்றைய பொழுதுக்குள் அவை எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டும் என்ற அவசரத்தில் பறந்து கொண்டிருந்தான்

நீண்டகாலமாக பழுது பார்க்கப்படாமல் விடப்பட்டிருந்த தார்வீதிகள் குண்டும் குழியுமாக வேகத்தைத் தடுத்துக்கொண்டிருந்தன. அந்த வீதியால் பாதுகாப்புப் படைகளின் எந்த வாகனமும் செல்லும் வழமையில்லாதபடியால் அந்த மோசமான வீதியையே தேர்ந்தெடுத்திருந் தான். பின் கரியலில் இருந்த பார்சல்களைப் பார்த்து போவோர் வருவோர் எல்லாம் குறுகுறுப்பாகப் பார்த்துக்கொண்டார்கள். அந்தப் பார்வையில் அனுதாபமும் இருக்கும் விநோதமும் இருக்கும்.

சந்திகளைக் கடக்கும் போது மட்டும் மிகவும் நிதானமாகக் கூர்ந்து நடமாட்டங்களை அவதானிக்கும் வகையில் வேகத்தைக் குறைத்துக் கொள்வான்.

மதியத்திற்கு முன்னம் வேலைகளை முடித்துவிட வேண்டும் என்ற அவதியில்

ட்டு தம் கடமையை நிறைவு செய்த பெருமையில் அசையாமல் நின்றன. புகையிலைச் செடிகள் பூரித்த இலைகளை நாலாபக்கமும் சிலிர்த்துக் கொண்டு கம்பீரமாகக் காட்சி கொடுத்தன. நெற்பயிர்கள் மாத்திரம் கதிர் மணிகளைச் சுமந்து கொண்டு தமக்குள் ரகசியம் பேசுபவர்கள் போல் ஒருவரோடொருவர் சிணுங்கிக்கொண்டு மெதுவாகத் தாலாட்டுப் பாடினார்கள் .

அந்தப் பயிர்களுக்கு நீர்

பதறிப்போய் ஒடுவார்கள். கல்லுக்கிளறும் தொழிலாளர்கள் வரிசையாக நின்று கொண்டு நிலத்தைக் கொத்தி அந்தப் பாரிய கற்களை வெளியே எடுத்து ஒரு புறமாகக் குவித்து வைத்தார்கள்.

அந்தச் செம்பாட்டு மண் அவர்கள் மேனியெங்கும்

அழகிய ஒறேஞ்கலர் கலவையால் செதுக்கப்பட்ட நடமாடும் சிற்பங்களாக அவர்களை


**இச்சிறப்பான நாவலை எழுதிய கோவிந்தன் யாழ்நகரில் வைத்துக் கடத்திச் செல்லப் பட்டு பல மாதகாலமாகியும் இன்னமும் விடுவிக்கப்பட்டவில்லை**

புரியாத ஒரு சோகத்தை அப்பிக் கொண்டிருந்தார்கள். கரடி போல கழுத்தை நிமிர்த்த முடியாமல் தடுமாறுபவர் களாட்டம் அடிக்கடி தலையை தொங்கப்போட்டுக் கொண்டு தம் முகபாவங்களை மற்றவர்கள் பார்த்துக் கொள்ளாமல் மறைத்துக் கொண்டார்கள்.

வெண்தலைக்கு மேலாக ஒரு துண்டைப் போட்டுக் கொண்டு முதுகில் ஸ்பிறேயரைச் சுமந்துகொண்டு வந்த கிழவர் இவனைப் பார்த்து கையைக்காட்டி மறித்து கூறினார். தம்பி சந்தியிலை ஆமி நிக்குது கவனம்.

வளைந்து நெளிந்து சென்றது. அது முன்னைய பாதையிலும் எப்படி இரண்டு கிலோ மீற்றராவது கூடுதலாக இருக்கும். கிறேவல் பாதையும் சில இடங்களில் மணல் பாதையமாக அது மாறி மாறி முகம் கொடுத்தது. குடிமனைகளைத் தாண்டிச் சென்றாலும் வாழைத்தோட்டங்களுக்கு மாத்திரம் குறைவில்லை. நீர் இறைக்கும் சப்தமும் இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தது. சில இடங்களில் அந்தப் பாதை ஒற்றையடியாகச் சிறுத்து பின் அதுவும் இல்லாமல் வெறும் நெருஞ்சிப்பற்றைகளாகவும் மாறி ஜாலம் காட்

**ஸ்பிரேயரைச் சுமந்து கொண்டு வந்த கிழவர் இவனைப்பார்த்து தம்பி சந்தியிலை ஆமி நிற்குது கவனம் என்றார்**




அவன் போலவே தோட்டங்களில் இருந்தவர்களும் பரபரத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கை பட்டு நேரடிக் கண்காணிப்பில் வளர்ந்த வாழைமரங்கள் பிரமாண்டமான குலைகளைத் தள்ளிவி

பாச்சும் மனிதர்களுக்கும் ஒரே உற்சாகமான வேலை. நீரிறைக்கும் யந்திரத்தின் தொடர்ச்சியான சப்தம் நின்று விட்டால் போதும் தண்ணீர் கட்டும் வேலையை விட்டுப் போட்டு கிணற்றை நோக்கி

மாற்றியது. அவர்கள் எல்லோருமே ஒரே அச்சில் வார்க்கப் பட்டவர்கள் போல் விலை எலும்பு வெளியே தெரிய வாயில் வெற்றிலைக் காவி ஏறிய பற்களைக் காட்டிக் கொண்டு முகத்தில் இனம்

தான் சொன்னது இவனுக்குக் கேட்டதோ என்று உறுதிப்படுத்திக் கொள்ள திரும்பிப்பார்த்தார். இவன் குச்சொழுங்கை ஒன்றில் லாவகமாக பைசிக்களைத் திருப்புவது கண்டு திருப்திப்பட்டுக் கொண்டார்.

பிரதான வீதிக்குச் சமாந்திரமாக செல்லும் ஒழுங்கை

டிக்கொண்டிருந்தது. கோவில்களைச் சுற்றியுள்ள ஆலமர நிழல்களில் உழைத்து களைத்த முதியவர்கள் தம் கூன்விழுந்த உடம்புகளை அப்படியே மல்லாந்து கிடத்தி உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

வழமையாக அவர்களைச்

( தொடர்ச்சி 7ம் பக்கம்)

கடந்த வாரம் பிரசுரமான

## இளங்கோவின் கடிதத்திற்கு பதில்

பாலன்

எனது கட்டுரையின் இரு பாகங்களை வாசித்து அதனைப்பற்றிய விமர்சனத்தையும் அனுப்பியமைக்கு நன்றி. இந்த விமர்சனம் ஈழபூமியில் வெளிவரும் அதே நேரம் பத்திரிகையின் நிர்வாக குழு உறுப்பினர்களில் ஒருவர் இதற்கான பதிலை தரும்படி கேட்டுக் கொண்டார். உங்கள் விமர்சனத்தை முற்றாக கிரகித்தன் பின்னர் எனது கண்ணோட்டத்தை உங்களுக்கு விளக்க முனைகிறேன்.

இராணுவ மார்க்கமே சரி என்று கூறிக்கொண்டு போராடிய இயக்கங்கள் புலியும், ரெலோவும் என்று குறிப்பிட்டது சரியான வாதமா என்று கேள்வி எழுப்பியுள்ளீர்கள். எனது கட்டுரையில் அகிம்சைக்குப்பின் ஆயுதம் எப்படி வந்தது என்று விளக்கவில்லை என்றும் கூறுகிறீர்கள். இரண்டு வேறுபட்ட விடயங்கள் இங்கு ஆராயப்பட வேண்டும். முதலாவது சரியான வாதமா என்பது பற்றியது. தமிழீழ போராட்டத்தை முன்னெடுத்த வேளைகளில் அதாவது ஆரம்பகாலங்களில் தத்துவார்த்த ரீதியிலோ அன்றி நெறிப்படுத்தப்பட்ட வகையிலோ போராட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. முற்போக்குச் சக்திகள், அரசினால் பாதிக்கப்பட்டவர்கள், மாணவர்கள் என்று அவ்வப்போது இனவாத அரசினால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த அரசை எதிர்ப்பதென்றால் ஆயுதம் தவிர வேறு வழி இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட போது உதிரிகளாக ஆயுதம் பற்றிச்சிந்தித்தார்கள். இதன் விளைவு ஆயுதம் நோக்கி இளைஞர்களின் கவனம் திசை திரும்பியது. ஒரு நோக்கத்தின் பிரகாரம் ஆயுதம் நோக்கித் தள்ளப்பட்ட இவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒரு நெறிப்படுதப்பட்ட அமைப்பு தேவை என்பதை உணர்ந்ததன் விளைவே இயக்கங்கள் உதயமாக காரணமாக அமைந்தது. இந்த வகையிலே இனங்காணக்கூடிய இயக்கங்களாக நான் குறிப்பிட்ட ஐந்து இயக்கங்களைப் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டேன். இந்த் ஐந்து இயக்கங்களில் போராட்டத்தை ஒரு தத்துவார்த்த அடிப்படையுடன் சேர்த்து முன்னெடுக்கும் ஆயுதப்போராட்ட இயக்கங்களாக மூன்றையும் தனி இராணுவ மார்க்கத்தை மட்டும் நம்பி போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்களாக புலிகள், ரெலோவை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டேனே தவிர மற்றைய இயக்கங்கள் பற்றிய எனது விமர்சனத்தில் அந்த இயக்கங்களை ஒரு இயக்கமாகவே கணிப்பிட தவறிவிட்டேன் என்று குறிப்பிடுவது தவறு. இந்த வகையிலே ஈழப் போராட்டத்தை முன்னெடுப்பதன் அவசியம், பொருளாதாரத் திட்டம், அதனை அமுல் படுத்த எடுக்க வேண்டிய வழிமுறைகள், சமுதாய முரண்பாடுகளுக்கான காரணங்கள், அதனைக் களைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்பன போன்ற இன்னோரன்ன விடயங்களைப் பற்றி சிந்திக்காமல் வெறுமானே தமிழீழம், தமிழீழம் என்று சொல்லிக்கொண்ட புலிகளையும் ரெலோவையும் என்னைப் பொறுத்தவரை இராணுவ மார்க்கம் மட்டுமே ஈழத்தை வென்று தரும் என்று போராடிய இயக்கங்கள் என்று கூறியதில் தவறிருக்கலாமா என்பதை இளங்கோ சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது ஆயுதப் போராட்டம் எப்படி வந்தது என்பதை விளக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு. கட்டுரையை எழுத முனைந்தபோதே வரலாற்றுச் சான்றுகளை நிறுவி எழுத முற்படவில்லை. இதற்கான காரணங்களில் ஒன்று இந்தக் கட்டுரை சாதாரண மக்களாலும் விளங்கிக்கொள்ளப்பட வேண்டும் என்பது, இரண்டாவது என்னிடம் பூரணமாக எழுதுவதற்கான போதிய ஆதாரங்கள் உரிய நேரத்தில் என்னால் பெற முடியாமல் போனது. இருப்பினும் கட்டுரையின் ஆரம்பப்பகுதிகளில்

கித் தள்ளப்பட்டோம் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே நீங்கள் கட்டுரையின் முதல் பாகங்களையும் படித்தால் இந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணுகிறேன்.

ஏனைய மூன்று இயக்கங்களின் பங்களிப்பை நான் சரியாக விமர்சிக்கவில்லை என்று கூறியிருக்கிறீர்கள். நான் விமர்சிக்கவில்லை என்று கூறியிருந்தால் இங்கே எனது பதிலை நீங்கள் எதிர்பார்த்திருக்கலாம். விமர்சனம் என்பது எப்பொழுதுமே பூரணத்துவம் அடையாது. ஒருவரின் கண்ணோட்டத்தில் இருந்து இன்னொருவரின் விமர்சனம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். ஒருவருக்கு பூரணத்துவமாக தெரியும் விமர்சனம் மற்றவருக்கு நிறைவின்றித் தெரியும். இங்கே நீங்கள் அடையாளம் காண்பது போல எனது ஆய்வு இந்த இயக்கங்கள் தொடர்பான பூரண விமர்சனத்தைத் தர தவறியிருக்கலாம். அது பூரணத்துவமானது என்று நான் விவாதிக்கவும் இல்லை. எனது ஆய்வில் ஏதாவது தவறுகளோ அல்லது குறைகளோ இருந்தால் அந்த ஆய்வு பூர்த்தியாவதற்கு உங்களை போலும் அரசியலில் அக்கறையுள்ள நல்ல விமர்சகர்களாலேயே அது முடியும் என்று நான் எண்ணுகிறேன். இனி விடயத்திற்கு வருவோம். நீங்கள் குறிப்பிட்ட மூன்று இயக்கங்கள் தொடர்பான எனது ஆய்வில் அந்த இயக்கங்களின் பங்களிப்பை விமர்சனம் குறிப்பிட்டுள்ளேன். ஒவ்வொரு இயக்கத்தையும் பற்றிய எனது ஆய்வில் இதனைக் கண்டு கொள்ளலாம்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். ஈரோஸ் இயக்கங்களில் மக்கள் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள் என்று நான் குறிப்பிட்டதை சுட்டிக் காட்டி எப்படி அந்த இயக்கங்கள் மாகாண சுயாட்சித் தேர்தலில் ஆதரவைப் பெற்றார்கள் என்று கேள்வி எழுப்பியுள்ளீர்கள். இன்று வடக்கு கிழக்கு மாகாண மக்கள் இருக்கும் நிலையில் ஒரு தீர்வு வருகிறது என்று வைத்துக் கொள்வோம். பின்னர் ஒரு தேர்தல் வந்தால் அதிலே புலிகளும் போட்டியிட்டால் புலிகள் வெல்வார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அதை வைத்துக் கொண்டு நாம் வாதிடமுடியுமா புலிகளுக்கு மக்கள் ஆதரவு அளித்துள்ளார்கள் என்று. இல்லை. துப்பாக்கிக் குண்டுகளுக்கு எந்த நேரமும் பதில் சொல்ல வேண்டும் என்று கொட்டாவி விடுவதற்கு மட்டும் வாய் திறக்கும் வடக்கு கிழக்கு மக்கள் அன்றைய தேர்தலை முற்றாக ஆதரித்தார்கள் என்று தப்புக் கணக்குப் போடுவது ஆராட்சிக் கண்ணோட்டமாகாது.

யாழ் மாவட்டத்திலே உண்மையில் என்ன நடந்தது. நீங்கள் அங்கிருந்திருந்தால் புரிந்திருக்கும். நீங்கள் குறிப்பிட்ட மாகாணசபைத் தேர்தலுக்கான நியமனத் தினத்தன்று 500 ரூபாவிற்கு மேல் எவரையுமே நியமனம் தாக்கல் செய்யும் இடமான யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அருகில் கொண்டு செல்ல விடவில்லை இந்திய இராணுவம். பலரின் பணம் பறிமுதல் செய்யப்பட்டு பின் திரும்பிக் கொடுக்கப்பட்டது அங்கிருந்த அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இதற்குக் காரணம் தம் கைப் பொம்மைகளைத் தவிர யாரும் நியமனப் பத்திரம் தாக்குதல் செய்யக்கூடாது என்பதற்கே. இப்படி துப்பாக்கி முனையில் நடக்கும் ஜனநாயகத்தைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். எனது ஆய்வு நல்ல இயக்கங்களாக மக்கள் மத்தியில் திகழ்ந்த இந்த அமைப்புக்கள் ஏன் மக்களால் விரும்பப்படாத அமைப்புக்களாக மாறின என்பதேயாகும்.

சாப்பாட்டுக்கு வழியில்லாமல் பேசுவதற்கு சுதந்திரமில்லாமல் அரசினாலும் இயக்கங்களினாலும் அடக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ள மக்கள் ஒரு

**T.K Video**

**&**

**T.K Enterprises**

**110, Merton High Street**

**Wimbeldon**

**London SW 19**

**TEL : 081-544 1980**

இலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கும் ஒடியோ வீடியோ கசற்றுகளுக்கும் நாடுங்கள்

*புதிய திரைப்படங்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.*

***T.K Video, Second Floor, 118, Tooting High Street***

*TEL: 081-672 2676*

# நியமனங்கள் நிறுத்தம்

(மட்டக்களப்பு)

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவதை உடனடியாக நிறுத்தும் படி கல்விச் சேவைகள் பணிமனையைக் கேட்டுள்ளார் கல்விச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜோஜ் மெண்டிஸ். மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களாக வேலை செய்தோருக்கு நியமனம் வழங்க ஏற்பாடுகள் ஏற்கெனவே செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

6ம் திகதி வியாழக்கிழமை வழங்கப்படிருந்த இந்நியமனங்களைப் பெறுவதற்காக மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை போன்ற கல்வி அலுவலகங்களுக்கு வந்த தொண்டர் ஆசிரியர்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்கள். மொத்தமாக 320 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருப்பினும் இவர்களது நியமனங்களைப் பின்போட்டதன் காரணம் என்ன என்பது இன்னும் அறியப்படவில்லை.

# கூட்டணியினர் சந்திப்பு

(நமது நிருபர்)

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பேரினவாத சக்திகளைத் தூண்டிவிட்டு மீண்டும் ஒரு கலவரத்தை உண்டு பண்ணாதீர்கள் என்று ஜனாதிபதியிடம் கேட்டுள்ளது கூட்டணியினரின் தூதுக் குழு. தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் சிவசிதம்பரம் தலைமையில் சென்ற ஒரு தூதுக் குழுவினர் சுதந்திரகட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவையும் சந்தித்துப் பேசியதாக அறியமுடிகிறது. இந்தக் குழுவில் திருச்செல்வம், பரராஜசிங்கம், சேனாதிராஜா, ஆனந்த சங்கரி, தங்கத்துரை ஆகியோர் இடம்பெற்றிருந்ததாக செய்திகள் கூறுகின்றன.

# நடமாட்டம் இல்லை

(இந்தியா)

பாக்கு நீரிணைக் கடல் பகுதிகளில் தீவிரவாதிகளின் நடமாட்டத்தை முற்றாக நிறுத்திவிட்டதாக அண்மையில் இந்தியப்பத்திரிகை ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார் இந்திய கடற்படை கிழக்குப் பிராந்திய கொமாண்டர் கார்னீரோ. கள்ளக்கடத்தல் வேலைகளையும் இதனால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த ஒரு வருடகாலத்துக்குள் புலிகள், மற்றும் கடத்தல்காரர்கள் பிரயோகித்த சுமார் 30 படகுகளை நாம் கைப்பற்றியிருக்கிறோம் என்று கூறினார். இலங்கைக்குத் திருப்பி அனுப்பபடும் அகதிகளுக்குத் துணையாக சர்வதேச எல்லை வரை நாம் செல்கிறோம். பின்னர் இலங்கை கடற்படையினர் செல்கின்றார்கள் என்று ஒரு நிருபரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.


சுவிஸ் வாசகர்களுக்கு ஒரு நற்செய்தி !

இப்பொழுது சுவிசிலும் விற்பனையாகிறது ஈழபூமி. லண்டனில் அதிகளவில் விற்பனையாகும் இப்பத்திரிகையில் உங்கள் ஆக்கங்களும் இடம் பெற வேண்டுமாயின் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**Asian Enterprise**
**HOHL Str 78**
**8004 Zurich.**

திருமண அழைப்பிதழ், பிறந்த நாள் வாழ்த்து, நன்றி நவிலல், மற்றும் விளம்பரங்களை ஈழபூமியில் பிரசுரிக்க மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


# வங்காலை முகாம் மீது தாக்குதல் !

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள வங்காலை என்னும் இடத்தில் உள்ள இராணுவ முகாம் மீது புலிகள் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளார்கள் என்று சனிக்கிழமை மாலை எமக்குக் கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. 8 ஆம் திகதி ஆரம்பமான இத்தாக்குதல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றது எனவும் இத்தாக்குதலினால் ஏழு இராணுவத்தினர் பலியாகியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. மேலும் இரண்டு இராணுவத்தினர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். வங்காலை இராணுவ முகாமில் இருந்து வெளியேற முனைந்த இராணுவத்தினரை பின்வாங் கச் செய்யும் பொருட்டு புலிகளினால் - மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருப்பதாக அறியப்படுகிறது.

# புலிகள் அறிக்கை

(நமது நிருபர்)

பிரபாகரன் மீது பிடிவிறாந்து உத்தரவு பிறப்பித்திருப்பது தமிழீழ மக்களின் போராட்டத்தை சர்வதேச அளவில் களங்கப்படுத்தும் ஓர் நடவடிக்கை என்று புலிகளின் பேச்சாளர் ஒருவர் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்று தெரிய வருகிறது. பரீஸ் நகரத்தில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில் இலங்கைக்கு சாதகமான முறையில் கடன் கிடைப்பதை உறுதி செய்வது இதனுடைய நோக்கங்களில் ஒன்றாகும் என்று இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# 96 பேர் வவுனியா சென்றனர்

(வவுனியா)

இந்தியாவிலிருந்து திருமலைக்கு கொண்டுவரப்பட்ட இரண்டாம்கட்ட அகதிகள் வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர். இவர்களில் 96 பேர் அடங்குகிறார்கள் என்று கூறப்படுகின்றது. இவர்களில் 13 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் வவுனியாவுக்கும், 6 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் முல்லைத்தீவுக்கும், ஏழு குடும்பங்களைச் சேர்ந்த 25 பேர் யாழ்ப்பாணத்திற்கும், ஒருவர் கிளிநொச்சிக்கும் செல்கிறார்கள் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 16 இடங்களில் பரீட்சை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரச அலுவலகங்களுக்கு எழுது வினைஞர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கு போட்டிப் பரீட்சைகள் நடாத்துவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இந்த பரீட்சை இம்மாதம் 15 ஆந் திகதி நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை யாழ் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம், அரச அதிபர் கே. மாணிக்க வாசகர் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். இந்தப் பரீட்சைகள் 16 இடங்களில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# 100 ரூபா சம்பள உயர்வு

(மலையகம்)

தோட்டத்தொழிலாளர்களுக்கும் 100 ரூபா சம்பளம் உயர்வு வழங்கப்படும் என்று கடந்த வரவு செலவுத்திட்டத்தில் கூறப்பட்ட போதிலும் இன்று வரை சம்பள உயர்வு வழங்கப்படாததினால் அதனை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்வோம் என்று தொழிலாளர்கள் அறிக்கை விடுத்திருந்தது யாவரும் அறிந்ததே. இது பற்றி அரசுடன் பேசிய கைதொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி இந்தச் சம்பள உயர்வு மாசிமாதச் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் என்று கூறினார். தைமாதத்திற்கான சம்பளமும் இதனுடன் சேர்த்து வழங்கப்படும் என அவர் உறுதியளித்துள்ளார்.

# யாழில் வயிற்றோட்டம்

(யாழ்)

யாழ் மாவட்டத்தில் மீண்டும் வயிற்றோட்ட நோய் பரவியுள்ளது. இதனைத் தடுப்பதற்கு மருந்துப் பற்றாக்குறையாக உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சுமார் 200 பேருக்கு மேல் ஒருநாளைக்கு இந்த நோய் பரவுவதாகவும் இதனைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் என்றும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நோயினால் இருவர் ஏற்கெனவே உயிரிழந்துள்ள்ளனர். வலிகாமம் மேற்கைச் சேர்ந்த சுழிபுரத்தில் வசிக்கும் ஜெகதீஸ்வரன் ஜெனிட்டா என்ற ஒரு வயதுச் சிறுமியும், பொன்னாலையைச் சேர்ந்த செல்வி எம்.சுலோசனா,22, என்பவருமே இவ்வண்ணம் நோயினால் உயிரிழந்தவர்கள் என்று அறியப்படுகிறது.

# தீவிரவாத எதிர்ப்பு சுவரொட்டிகள் மலையகத்தில்

(நமது நிருபர்)

ஊவா மாகாணத்தில் பல பாகங்களிலும் தீவிர வாத எதிர்ப்புச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. மலையகத்தையும் யாழ்ப்பாணம் போன்று சுடுகாடாக்காதீர்கள் என்று கூறும் இந்தச் சுவரொட்டிகள் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. எந்த ஒரு அமைப்பும் உரிமை கோராத இந்தச் சுவரொட்டிகள் மேலும் தெரிவிப்பதாவது, யாழ்ப்பாணம் போன்று எமது பகுதிகளையும் சுடுகாடாக்காதீர்கள். எமது பகுதிகளில் அமைதி,சமாதானம் போன்றவற்றை சீர்குலைக்காதீர்கள். கொலை, கொள்ளை போன்ற சமூக விரோதச் செயல்கள் மலையகத்தில் தலைதூக்கியுள்ளன. இதனால் பிரச்சனை உருவாகி பாரிய தீவிரவாதம் இங்கு ஏற்பட வழி சமைக்காதீர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ் ஆஸ்பத்திரியில் மர்மக் குண்டு வெடிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வார பிற்பகுதியில் யாழ் - ஆஸ்பத்திரியில் மர்மமான முறையில் குண்டு ஒன்று வெடித்துள்ளது. இக்குண்டு வெடிப்புக்கான காரணம் எதுவும் இன்னும் அறியப்படவில்லை. இது பற்றி ஆஸ்பத்திரியை தற்போது நிர்வகித்து வரும் செஞ்சிலுவைச்சங்கம் எவ்வித தகவலும் வெளியிடவில்லை. இருப்பினும் இது ஷெல் தாக்குதலாக இருக்கலாம் எனப் பரவலாகப் பேசப்பட்ட போதும் தாம் எவ்வித ஷெல்தாக்குதலையும் நடாத்தவில்லை என இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. இது இராணுவம் யாழ்க்குடா நாட்டில் நுழைவதைத் தடுக்கும் நோக்கில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட கண்ணிவெடியாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. அதிஸ்டவசமாக எவரும் இச்சம்பவத்தால் பாதிக்கப் படவில்லை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

# அவுஸ்ரேலியா நிவாரண உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்குக்கு நிவாரணப் பணிக்கு மூன்று லட்சம் டொலர்களை வழங்க அவுஸ்ரேலியா அரசு முடிவு செய்துள்ளது. இதனை வடக்கு கிழக்கில் தற்போது சேவை செய்து வரும் பொது நல நிறுவனங்களுக்கூடாகவே இந்நிதி பாவிக்கப்பட உள்ளது என அவுஸ்ரேலியா அரசு அறிவித்துள்ளது. வடக்கு கிழக்கில் பல பகுதி மக்கள் பல பகுதிகளிலும் இருந்து அகதிகளாக வெளியேறி கவனிப்பாரற்று சிதறிக்கிடப்பது யாவரும் அறிந்ததே. இதற்கும் மேலாக இந்தியாவில் இருந்து அகதிகள் திருப்பி அனுப்பப்படும் இக்கட்டத்தில் இவ் உதவி அறிவிக்கப்பட்டது சிறுதளவில் ஆறுதலை அளிக்கும் விடயம் என வட பகுதியில் சேவை செய்து வரும் சமூக சேவை நிறுவனம் ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

# புலிகளின் படகு மீது இராணுவம் தாக்குதல்

(யாழ்நகர்)

கடற்பகுதியில் வல்வை நோக்கி வந்த விடுதலைப் புலிகளின் படகொன்றை இலங்கை இராணுவம் தாக்கியதில் விடுதலைப் புலி உறுப்பினர் சிலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர் என இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது. இவர்கள் இந்தியாவிலிருந்தோ அல்லது மட்டுநகர் திருமலைப் பகுதிகளிலிருந்தோ யாழ் நோக்கி வருகையிலேயே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. இவர்களின் அறிக்கையின் படி நால்வர் பலியானதாகவும் வேறும் சிலர் காயங்களுடன் தப்பியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

# ஜே. வீ. பி – பொலீஸ் கைகலப்பு

(கல்கிசை)

கல்கிசை, தெலவல தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஜே.வி.பி. இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்களை வேறு இடத்திற்கு மாற்ற எடுத்த முயற்சி பெரும் பிரச்சனையைய உண்டு பண்ணியுள்ளது. இம்முகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகளை வேறு ஒரு முகாமுக்கு மாற்ற எடுத்த முயற்சியைக் கண்டித்து அங்கு சத்தியாக்கிரகம் ஒன்றை ஜே.வி.பி.யினர் மேற்கொண்டனர். இந்த சத்தியாக்கிரகத்தை முறியடித்து, அவர்களை வேறு இடத்திற்கு மாற்ற முற்பட்ட போது எற்பட்ட மோதலில் ஐந்து பொலிசாரும், 43 கைதிகளும் காயமுற்றனர். இச்சம்பவத்தை அடுத்து இவர்களின் மாற்றம் தற்காலிகமாகத் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.


லண்டனில் உள்ள பிரபலமான தமிழ் வீடியோ மற்றும் 35m.m விற்பனையாளருக்கு விநியோகஸ்தர்கள் தேவை

தொடர்புகட்கு:
SUEF FILMS
PO BOX 151 Tooting
London SW17
United Kingdom.

Phone 081-544 0783 Fax 081-682 1870



To Place Your AD
Call
081-767 8895



தேவை

North London பகுதியில் நிருபர் தேவை எமது முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

# பொலிசார்மீது தாக்குதல் நால்வர் காயம்

(மலையகம்)

செவ்வாய்கிழமை (4-2-92) அன்று காவவில் இருந்த பொலிசார் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது நான்கு பொலிசார் காயமடைந்துள்ளனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது. இராணுவ சீருடையில் வந்த பத்திற்கும் மேற்பட்ட இனந்தெரியாத குழு ஒன்றே இந்தத் தாக்குதலை நடாத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளது. சுமார் 25இற்கும் மேற்பட்ட பொலிசார் காவலிலிருக்கும் இந்தப் பொலிஸ் நிலையத்தை யார் தாக்கியிருக்கலாம் என்பதைக் கண்டறிய விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. செவ்வாய் கிழமை இரவு பதினொரு மணியளவில் நடந்த இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்படுவதாவது, பதுளை மாவட்டத்தில் உள்ள பிபிலை என்னும் இடத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் இருந்த பொலிசார் காவல் அரண்களில் காவல் புரிந்து கொண்டிருந்தனர். அச்சமயம் திடீரெனத் தோன்றிய சுமார் பத்துப்பேர்களடங்கிய இராணுவ சீர்உடையில் வந்த ஒரு கோஸ்டியினர் பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதலை நடாத்தினர். இதனால் நான்கு பொலிசார் காயமடைந்தனர். இருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது. இவர்கள் செங்கலடி என்னும் இடத்தில் இருந்து வந்து இந்தத் தாக்குதலை நடாத்திவிட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

# எங்களிடம் சரணடையுங்கள்!
## ரெலோ துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் உள்ள புலி உறுப்பினர்கள் எந்த வித பயமும் இன்றி எங்களிடம் சரணடையலாம். உங்களுக்குரிய பாதுகாப்பை உறுதி செய்வது எங்களது கடமை. புலிகளின் தலைமைப்பீடத்துடன் ஒத்துப்போகமுடியாமல் வெளியேறி தஞ்சம் கோர வழியில்லாமலும் தவிக்கும் அனைத்து புலிகளும் எம்மிடம் சரணடையுங்கள் உங்களைக் காப்பாற்றுவது எங்களது கடமை என்று கூறும் வகையில் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறது ரெலோ இயக்கம். இந்தத்துண்டுப் பிரசுரத்தில் மேலும் எழுதப்பட்டிருப்பதாவது, நாம் புலிகளின் தலைமைப்பீடத்துடனேயே போராடுகின்றோம். சாதாரண புலி அங்கத்தவர்களுடன் அல்ல. நீங்கள் எந்தக் குற்றமும் அறியாதவர்கள். எனவே நீங்கள் எங்களிடம் சரணடைந்தால் உங்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் கொடுப்பது எங்களின் கடமை.

எங்களிடம் ஏற்கெனவே பத்தொன்பது பேர் சரணடைந்துள்ளனர். அவர்கள் எங்கள் பாதுகாப்பில் இருக்கின்றார்கள். அவர்ளை இராணுவம் கைது செய்ய நாம் அனுமதிக்க மாட்டோம். அவர்களுக்குரிய பாதுகாப்பை உறுதி செய்வது எங்களது கடமை. அதே போன்று இன்னும் மூன்று புலிகள் செங்கலடியிலுள்ள எங்கள் முகாம் பொறுப்பாளர் பேர்டோ முன்னிலையில் ஆயுதங்கள் சகிதம் சரணடைந்துள்ளனர். இவர்களில் ஒருவர் பெண் என்றும் மட்டக்களப்பு புலிகள் இயக்க முக்கியஸ்தர் ஜோய் என்பவரின் சகோதரர் சசி என்பவரும் ஒருவர் என்று இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்தத் துண்டுப்பிரசுரம் 5ஆந் திகதி புதன் கிழமை விநியோகிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

# 5 பேர் வெட்டிக்கொலை

(மலையகம்)

பதுளை மாவட்டத்தில் உள்ள கிராந்துரு கோட்டை உல்ஹிடிவெவ என்னுமிடத்தில் உள்ள ஒரு வீட்டிற்குள் 4ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அதிகாலையில் புகுந்த இனம்தெரியாத குழுஒன்று அங்கிருந்த ஐந்து பேரை வெட்டிக் கொலை செய்துவிட்டு தப்பித்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. முறையே 12,13,15, வயதுப் பிள்ளைகள் மூவரும் அவர்களது அன்னையும் பாட்டியுமே இவ்வாறு வெட்டிக் கொலை செய்யப்பட்டவர்களாகும். இவர்களது குடும்பத்தில் ஏற்பட்ட தகராறினாலேயே இந்தக் கொலை நடந்திருக்கலாம் என்று பொலிஸ் சந்தேகிக்கின்றது.

# நிதி ஒதுக்கீடு

(அக்கரைப்பற்று)

அக்கரைப் பற்று, ஏழு வெட்டுவான் பகுதியில் 30 இலட்சம் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட அக்கரைப்பற்று உதவி அரச அதிபர் அலுவலகம் அமைப்பதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அனுமதி வழங்கியுள்ளார்.

## திருமலை அகதிகள்
# வவுனியாவில் அவதி

(வவுனியா)

திருமலையில் இருந்து வந்த அகதிகளுக்கு எந்த வசதிகளும் செய்து கொடுக்காமையினால் அவர்கள் பெரும் கஸ்டத்தை எதிர் நோக்குகிறார்கள் என்று வவுனியாவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. வவுனியா புகையிரத நிலையத்தில் உள்ள பயணிகள் தங்குமிடத்தில் தற்காலிகமாக தங்கியிருக்கும் இவர்கள் குழந்தைக்கு பால்மா கரைப்பதற்குக்கூட சுடுநீர் இல்லாத அளவுக்கு கஸ்டத்தை எதிர்நோக்குகிறார்கள். திருமலையில் இருந்து வவுனியா வந்த சுமார் 92 பேரளவில் இங்கு தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## குற்றத்தை ஒப்புக்கொண்டவருக்கு
# ஒருவருட சிறை!

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையக குண்டுவெடிபோடு தொடர்புடையவர் என்று கைது செய்யப்பட்ட வடமாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் புதன் கிழமை 5 ஆம் திகதி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஐந்து வருடகாலத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருடகால கடூளியச் சிறைத்தண்டனையும், 20 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அபராதத் தொகையினைக் கட்டத் தவறினால் ஐந்து வருட கடூளியச் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று மேல் நீதிமன்ற நீதிபதி ஜெயசூரிய உத்தரவிட்டார்.

## வாரத்தில் 3 நாட்கள்
# பார்க்க அனுமதி

(கொழும்பு)

மகசின் சிறைச்சாலையில் உள்ளவர்களை வாரத்தில் மூன்று நாட்கள் சென்று பார்வையிடலாம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது. தடுப்புக்காவலில் உள்ளோரை அவர்களது உறவினர்கள் செவ்வாய்,வியாழன், சனி ஆகியதினங்களில் சென்று பார்வையிடலாம். பார்வையிட விரும்புவோர் மேற்படி தடுப்பு முகாமுக்குச் சென்று சிறைச்சாலை அத்தியட்சகரிடம் அனுமதி பெற்றால் போதுமானது என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்து தெரிந்தே. இந்த ஏற்பாடுகளினால் உறவினர்கள் தரகர்களை நாடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்று செல்லச்சாமி அறிவித்துள்ளார்.

## ஜப்பான்
# உதவி

(நமது நிருபர்)

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களினால் அகதிகளாக்கப்பட்டவர்களுக்கென ஜப்பான் உணவு உதவியை வழங்கியுள்ளது. 13 இலட்சத்து 20 ஆயிரம் டொலர் பெறுமதியான உணப்பொருட்களை இந்த நிவாரண திட்டத்திற்கு வழங்கியிருக்கிறது என்று செய்திகள் தெரிவிக்கின்றன. உலக உணவுத் திட்ட நிறுவனம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக இச்செய்திகள் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு புலிகள் பலி

(மட்டுநகர்)

பளுகாமம் என்னும் இடத்தில் படைகள் பதுங்கிஇருந்து சுட்டதில் இரண்டு புலிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது இவ்விதமிருக்க,பிறிதொரு நடவடிக்கையின்போது புலிகள் என்று சந்தேகிக்கப்படும் 14 இளைஞர்களை தாம் கைது செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளன.

# வீடின்றி தவிப்பு

(மாத்தளை)

இந்தியாவிலிருந்து திருமலைக்கு திருப்பி அனுப்பப்பட்ட அகதிகளில் சிலர் வீடு

( தொடர்ச்சி 7ம் பக்கம்)

## தீவுப்பகுதியில்
# எழுபத்தியிரண்டு சடலங்கள்

(நமது நிருபர்)

யாழ் மாவட்டத்தில் அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தீவுப் பகுதி ஒன்றில் உள்ள குழியொன்றில் 72 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் எப்படிக் கொல்லப்பட்டார்கள் என்று விசாரணை நடாத்த வேண்டும் என்று கேள்வி எழுப்பினார் யாழ் மாவட்ட பா.உ.நவரட்ணம். யாழ் மாவட்டத்திலுள்ள மண்டைதீவு, மண்கும்பான் ஆகிய இடங்களில் இருந்து பல இளைஞர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என்று இன்று வரை உறவினர்களிற்குத் தெரியாது. இவர்கள் அனைவரும் பத்தாம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள் என்பது கவனத்திற்கெடுக்கப்பட வேண்டும். இது பற்றி அங்குள்ள இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துக் கேட்டபோது அவர்களை கொழும்புக்கு விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளதாக கூறியிருக்கின்றனர். ஆனால் அவர்கள் அப்படி கொழும்புக்குக் கொண்டுவரப் படவில்லை. அவர்கள் எங்கே. இதுமட்டுமல்ல, இன்னுமொரு இடத்தில் இருந்த குழியொன்றில் 72 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் இராணுவத்தினராலேயே படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்களுக்கு நடந்தவற்றை அறிவதற்கு ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என்று நவம் எம்.பி. கேட்டுக் கொண்டார்.

# நாம் தயார் - தேரோ

(நமது நிருபர்)

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு உருப்படியான யோசனைகள் புலிகள் முன்வைத்தால் நாம் அதனைப் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாக மல்வத்த பீடாதிபதி மகாநாயக்க தேரோ கூறியுள்ளார். யாழ் சென்று திரும்பிய கத்தோலிக்க குருமார் இவரைச் சந்தித்துப் பேசிய போதே இவர் இவ்வாறு கூறியதாக அறியப்படுகிறது. கத்தோலிக்க ஆயர் குழு ஒன்று அடுத்த வாரம் மீண்டும் யாழ் செல்லலாம் என்றும் இவ்வாறு செல்லும் பட்சத்தில் புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்தித்துப் பேச்சு வார்தை நடத்துவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியாவில் நடமாடும் சேவை

(வவுனியா)

இம்மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை அன்று வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் மின் சக்தி அமைச்சின் நடமாடும் சேவை நடைபெற்றது. இதில் மின்சக்தி அமைச்சர் பண்டார சமூகமளித்திருந்தார். வவுனியா மாவட்ட பா.உ. வும் இராஜாங்க, கல்வி அமைச்சருமான திருமதி புலேந்திரனும் இந்த நடமாடும் சேவையின் போது கலந்து கொண்டார். இது இவ்விதமிருக்க ஜனாதிபதி நடமாடும் சேவை எதிர்வரும் வைகாசி மாதம் வவுனியாவில் நடைபெற உள்ளதாகவும் அதற்காகஐந்து இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வேறொரு செய்தி கூறுகின்றது. இதற்காக வவுனியா மத்திய மகாவித்தியாலயம், ரம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், காமானி மகாவித்தியாலயம், சைவப்பிரகாசவித்தியாசாலை, சி.சி. தமிழ் கலவன் பாடசாலை ஆகியன தெரிவு செய்யப்பட்டுள்ளன.

# சிறுமி கால் இழப்பு

(மாத்தளை)

மாத்தளை முத்து மாரியம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வீதியில் நடந்துகொண்டிருந்த ஐந்து வயது சிறுமி வாகன விபத்தில் சிக்கி தனது ஒரு காலை இழந்துள்ளார். கர்ணகி என்ற பெயருடைய இந்தச் சிறுமி கந்தநுவர தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளியின் மகள் என்று தெரியவந்துள்ளது. பெற்றோருடன் கோயிலுக்கு வணங்க வந்த இந்தச் சிறுமி பூஜை முடிந்த பின் கடலை வாங்குவதற்காக தெருவைக் கடந்து சென்று கடலை வாங்கிக் கொண்டு கோயிலுக்குத் திரும்புகையில் சிமெந்து ஏற்றிக் கொண்டு திரும்பிய லொறி ஒன்றில் மோதுண்ட போதே இவ்வாறு காலை இழந்தார். விபத்து சம்பவித்த மறுகணமே இவர் மாத்தளை ஆதாரவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் இவரது கால் பறிபோவதைத் தடுக்க முடியவில்லை என்று கோயில் அத்தியட்சகர் வருத்

*சீர்வரிசை பற்றி*
*சீர்திருத்தம் பேசி*
*சிலகாலம் திரிவார்-தன்*
*சீர்வரிசை மேலே*
*சிவனதாய் இருப்பார் -இவர்*
*சீர்திருத்தப் பேச்சை*
*சிலபேரும் நம்பி*
*சீர்வரிசையின்றி*
*சிக்கனமாய்ப் பெண்ணை*
*சீவிக்க தொடுக்க*
*சிலகாலம் பின்னே (போக)*
*சீர்திருத்தக் காரன்*
*சீர்வரிசை கேட்டு*
*சில அடியும் கொடுத்து*
*துரத்திவிட்டான் பெண்ணை-*

**து**
**ஸ்**
**ய**
**ந்**
**தி**

## பப் – நியூ கினியில் பதிவேடுகள்
# புலிகளிடம் புதிய கப்பல்கள்

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் மேலும் இரு கப்பல்களை கொள்வனவு செய்துள்ளனர் என்று நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. புலிகளிடம் ஏற்கெனவே மூன்று கப்பல்கள் இருந்தது தெரிந்ததே. கப்பல்களை ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு செல்கையில் இந்திய கடற்படையினரால் பிடிக்கப்பட்டதன் பின் புலிகள் மேலும் இரண்டு கப்பல்களை கொள்வனவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. பப்புவாநியூகினியா என்ற இடத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்தக் கப்பல்களில் இலட்சக்கணக்கான ரூபா செலவில் கொள்வனவு செய்யப்பட்ட ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அத்துடன் இந்தக் கப்பல்களில் தொலைத் தொடர்புச் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# யாழ் வளாகக் கவுன்சில் மறுப்பறிக்கை

(யாழ்)

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் என்ற தலைப்பில் வெளிவரும் பிரசுரத்திற்கும், தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென யாழ் பல்கலைக்கழக கவுன்சில் அறிவித்துள்ளது. இந்தப் பிரசுரங்கள் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற பெயரில் இந்த துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படவில்லை. சில ஆண்டுகளின் பின் இது பெயரளவிலேயே இருந்து வந்தது.

பட்டபோது இதற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று கவுன்சில் அறிவித்துள்ளது. இந்தத் துண்டு பிரசுரம் தொடர்பாகவோ அல்லது சுவரொட்டிகள் தொடர்பாகவோ பல்கலைக்கழக கவுன்சிலுக்கும் அதன் ஆசிரியர்களுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்று பல்கலைக்கழக கவுன்சிலில் ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

# மலையகத்தில் ஆட்கடத்தல் அதிகரிப்பு

(நுவரெலியா)

மலையகத்தில் ஆள் கடத்தல்கள் அதிகரித்துக் கொண்டிருப்பதாக அறியப்படுகிறது. கடந்தவாரம் நுவரெலியாவில் வைத்து தமிழ் இளைஞர்கள் மூவர் இனந்தெரியாத குழுவொன்றினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இலக்கத் தகடற்ற ஒரு வாகனத்தில் வந்த இவர்களே இவ்வாறு இந்த மூன்று இளைஞர்களையும் கடத்திச் சென்றுள்ளனர் .

சதல்ல என்ற இடத்தைச் சேர்ந்த இராஜேந்திரன், இராகலையைச் சேர்ந்த சண்முகநாதன், போர்ட்சூட்டைச் சேர்ந்த சோமசுந்தரம் ஆகியோரே இவ்வாறு கடத்தப்பட்டவர்களாவர். இவர்கள் பற்றிய தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இதனால் அச்சமடையும் இளைஞர்கள் கொழும்புக்கு இடம் பெயருகின்றனர் என்று கூறப்படுகிறது.

# பிரேமாவுடன் ஒத்துழைக்க தமிழ் எம். பி கள் முடிவு

(நமது நிருபர்)

ஸ்ரீ லங்கா ஜனாதிபதி பிரேமதாஸவின் திட்டங்களுக்கு குந்தகம் விளைவிப்பதில்லை என்று நான்கு தமிழ் பா.உ.கள் கையொப்பமிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். ஜனாதிபதியின் திட்டங்களை இனிவரும் காலங்களில் எதிர்ப்பதில்லை என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளது. வெறுமனே ஜனாதிபதியின் திட்டங்களை எதிர்ப்பதனால் பயன் ஏதும் இல்லை என்று கூறும் இவர்கள், தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைப்பதை உறுதி செய்யவே இவ்வாறு ஒப்பமிட்டு அனுப்பி வைத்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளனர். ஈ.என்.டி.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்த யாழ் மாவட்டத்திற்கான பா.உ. ஸ்ரீனிவாசன், ரெலோ பா.உ. திவ்வியநாதன்,ஈரோஸ் பா.உ.கள் பகிர்,அயூப் ஆகிய இந்த நால்வருமே இந்தக் கூட்டுக் கடிதத்தை அனுப்பியவர்களாகும். ஏற்கெனவே தமிழ் பேசும் மக்களின் நலன்களின் தங்கள் சொந்த நலன்களை வளர்த்துக்கொள்ளும் இவர்கள் இப்படிச் செய்ததில் தவறில்லை என்று தமிழ் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# அரைவாசி இராணுவம் யாழில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் மொத்தம் 77000 இராணுவத்தினர் உள்ளதாகவும் அதில் 45000 பேர் யாழ் குடாநாட்டின் மீது நடாத்த இருக்கும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப் போவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளும் பொருட்டு முன் நடவடிக்கையாக ஆயுதங்கள் தளபாடங்கள் உணவுப்பொருட்கள் என்பன யாழ் குடாநாட்டிற்கு கொண்டு செல்லப்படுகின்றன என்றும் இராணுவ இரகசிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பாரிய தாக்குதல் ஒன்றினை முடுக்கி விடத் தயார்செய்யும் இலங்கை அரசு எந்த நேரமும் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்றும் இத்தாக்குதலை ஆரம்பிக்குமுன் யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு இது விபரம் அறிவிக்கப்படமாட்டாது என்று அறியப்படுகிறது. அதுபோலவே புலிகளும் பாரிய அளவில் ஆயுதங்களைக் கொள்வனவு செய்து வைத்திருக்கிறார்கள் என்றும் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கும் சமயத்தில் பாரிய இழப்புக்கள் இருபக்கமும் ஏற்படும் என்றும் அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# கொழும்பில் இருப்போரை பதிவுசெய்யும்படி அரசு உத்தரவு

(நமது நிருபர்)

கொழும்பில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் அனைவரும் தமது பெயர், ஊர் விபரங்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளது. பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டிருக்கும் இந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, கொழும்பில் தற்காலிகமாக வசிப்பவர்கள் தங்கள் பெயர், ஊர், போன்ற விபரங்களுடன் இங்கு தங்கியிருப்பதற்கான காரணங்கள் அனைத்தையும் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு பதிவு செய்யத் தவறியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இது பற்றி தமிழ் பா.உ. ஒருவர் கூறுகையில் இது வடகிழக்கில் இருந்து உயிர் தப்பி கொழும்பு வந்திருக்கும் அகதிகளைத் திரும்ப சொந்த இடங்களுக்கு அனுப்பும் ஒரு நடவடிக்கையே என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஜே. வி. பி உறுப்பினர்கள் பரீசில் கைது

(பிரான்ஸ்)

இலங்கையின் தென்பகுதியில் போராடிக்கொண்டிருக்கும் ஜே.வி.பி.என்ற அமைப்பின் உறுப்பினர் இருவர் பிரான்ஸில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்ட போது இந்த அமைப்புத் தொடர்பான சில ஆவணங்களும் கண்டெடுக்கப்பட்டன. கடந்த காலத்தில் இலங்கை அரசு தமது அமைப்பை நசுக்கக்கூடிய அளவிற்கு வந்தமைக்குரிய காரணங்கள் அடங்கிய ஆவணங்களும் இதில் அடங்குகிறது. அரச நிறுவனங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் ஊடுருவத் தவறிவிட்டதாக இத்தாலியில் இருந்து எழுதிய கடிதம் ஒன்றும் இந்த ஆவணங்களில் இருப்பதாக கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

காமினி வசந்தாசந்ரக்கோன் மற்றும் அவரது சகோதரர் ஆகியோரே இவ்வாறு பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டவர்களாகும். இந்த ஆவணங்களில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமிழ் போராளிகள் உலக மட்டத்தில் தங்கள் போராட்டத்தை பிரச்சாரம் செய்தனர். அவ்வாறு செய்யப்பட்ட பிரச்சாரம் அவர்களது போராட்டத்திற்கு வலுவைத் தேடிக்கொடுத்தது. அதே போன்று நாமும் உலக அளவில் பிரச்சாரம் செய்யத் தவறியது எங்களது தோல்விக்கு ஒரு காரணம். கைது செய்யப்பட்டவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

# ஓமந்தையில் குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஓமந்தை என்னும் இடத்தில் இருந்த புலிகளின் முகாம் ஒன்று இராணுவத்தின் தாக்குதலுக்கு இலக்கானது. ஓமந்தை, விளாத்திக்குளம் பகுதியில் அமைந்திருக்கும் பெண் புலிகளின் முகாம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல் மூலம் இந்த முகாம் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது என்று தெரியவந்துள்ளது. இத்தாக்குதலின் போது மூன்று பெண்புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். குண்டு வீச்சுத் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் தனது மகளைப் பார்க்கச் சென்ற ஒரு பெண்புலி உறுப்பினரின் தாயாரும் இத்தாக்குதலின் போது கொல்லப்பட்டார்.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட சில நிமிடங்களில் அந்த ஊர் மக்கள் ஒளிவிடங்களுக்குள் மறைந்துகொண்டனர். தாக்குதல் சுமார் இரண்டு மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது இப்பகுதிகளில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது.

# கனடாவில் இலங்கை அகதிகளே அதிகம்

(கனடா)

அகதிகளாக வந்து கனடாவில் குடியேறியவர்களில் ஏனைய நாடுகளைவிட அதிக எண்ணிக்கையானனோர் இலங்கையர்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவிலுள்ள அகதிகள் குடியேற்ற சபை ஒன்றின் அறிக்கையின் பிரகாரம் இந்தப் புள்ளி விபரம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கனடாவில் அகதிகளாக தஞ்சம் கோரி குடியேறியவர்களில் இலங்கையர்களே அதிகமாகும். ஸ்ரீ லங்காவில் நடக்கும் பிரச்சனையின் நிமித்தமே இவர்கள் இங்கு அகதிகளாக வந்துள்ளனர். இதனாலேயே நாம் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைக்கான உதவியை நிறுத்தினோம்.

1990 ஆம் ஆண்டு 3690 பேருக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கப்பட்டதாகவும், மேலும் 3790 பேருக்கு அகதிகள் அந்தஸ்து கோர போதிய ஆதாரங்ரங்கள் இருப்பதாகவும் இச்சபை அறிவித்துள்ளது.

# வவுனியாவில் நகர்ப்புற பாடசாலைகள் இயங்க அனுமதி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசங்களில் இருந்து ஐம்பது யார் தொலைவிலுள்ள பகுதிகளில் இருக்கும் அனைத்து பாடசாலைகளும் இயங்கலாம் என்று சில தினங்களுக்கு முன்னர் இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். இதுவரை காலமும் பாடசாலைகள் இயங்கத் தடை உத்தரவு விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. இந்த உத்தரவை அடுத்து இப்பகுதிகளில் உள்ள பாடசாலைகள் வழமை போல் நடாத்தப்படுகின்றன.

# ஈழத்தமிழர்கள் மீது தென்னிந்தியர்களுக்கு வெறுப்பில்லை

(காயத்திரி கொன்ஸ்டன்ரைன்)

இந்தியாவில் தமிழர்கள் ஈழத் தமிழர் மீது கரிசனையும், கருணையும் கொண்டுள்ளனர். ராஜீவ் காந்தியின் கொலையைத் தொடர்ந்து தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் ஈழத்தமிழர்கள் தொடர்பாகவும் புலிகள் தொடர்பாகவும் எதிர் பிரச்சாரம் மேற்கொண்டன. பத்திரிகையாளர்களும், சில அரசியல் வாதிகளும் கனவு கண்டபடி தமிழ் நாட்டு மக்கள் ஈழத் தமிழர்களை முற்றாக எதிர்த்து ஒதுக்கிவிடவில்லை. 1984 இல் இந்திரா காந்தி கொலையுண்ட போது 3000 சீக்கியர்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் ராஜீவ் காந்தியின் கொலையின் பின் இவ்வாறு நடைபெறவில்லை. தமிழ் தகவல் நடுவத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலந்துரையாடலின் போது திரு பழ. நெடுமாறன் இவ்வாறு தெரிவித்தார்.

நெடுமாறன் தொடர்ந்து பேசும் போது, தற்போது தமிழகத்தில் ஆட்சியாளர்களினால் பத்திரிகையாளர்கள் பயமுறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் வே பிரபல ஈழத் தமிழ் பத்திரிகையாளர் திரு.சிவஞானம் சிறைவைக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்தார்.

முன்னர் பல இயக்கங்கள் தமிழ் நாட்டில் செயற்பட்ட போது பல வன்முறைச் சம்பவங்கள் ஈழத் தமிழ் இளைஞர்களினால் மேற்கொள்ளப்பட்டதெனவும் தற்போது அவை குறைந்து விட்டதாகவும் தெரிவித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் கட்டுப்பாடான இயக்கமென்ற உண்மையை இந்திய தமிழ் மக்களும் புரிந்து விட்டனர் என்றும் தெரிவித்தார். பல மேற்கு நாடுகளுக்கும் விஜயம் செய்த நெடுமாறன், கனடாவில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்கள் ஈழப்பிரச்சனையில் மிகவும் அக்கறையுடன் செயற்படுவதாகத் தெரிவித்தார். தமிழ் நாட்டு அரசியலைப் பற்றி விபரிக்கும் போது திராவிட உணர்வு என்பது மாயை எனவும், இது ஒரு தவறான விடயம் என்பதை மக்களும் அரசியல்வாதிகளும் தற்போது உணர்ந்து விட்டதாக அவர் தெரிவித்தார். விபரம் புரியாத சிலரே தமிழ் உணர்வையும், திராவிட உணர்வையும் கலந்து பேசியும், எழுதியும் வருகின்றனர்

# அருட்சோதியின் மறைவில் மர்மம்

(ஜெயவேந்தன்)

ஈரோஸ் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் என முன்னர் கருதப்பட்ட அருட்சோதி என்பவர் கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி சென்னை கோடம் பாக்கத்தில் உள்ள வீட்டில் வைத்து மிக மர்மமான முறையில் இறந்துள்ளார். இச் செய்தி ஏற்கெனவே ஈழ பூமியில் வெளியானது தெரிந்ததே. ஆரம்பத்தில் இது தற்கொலை என்று மூடி மறைக்கப்பட்டாலும் தற்போது இது கொலை என்று சந்தேகிப்பதற்கு பல ஆதாரங்கள் கொடுக்கப்படுள்ளன.

தற்போது பிளவு பட்டிருக்கும் ஈரோஸ் அமைப்பில் சங்கர்ராஜியுடன் இவர் மிகவும் தொடர்பு வைத்திருந்தார் என அறியப்படுகிறது. ஆரம்பத்தில் பால குமாருடன் ஈரோஸில் முக்கிய உறுப்பினராக இருந்த அருட்சோதி பின்னர் சங்கர் ராஜியுடன் மிகவும் நெருக்கமான முறையில் இருந்துள்ளார். ஈரோஸின் ஒரு பகுதி எனக் கூறிக்கொள்ளும் சங்கர் ராஜி பாலகுமார் மற்றும் புலிகள் இயக்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவது அறிந்ததே. கடந்த சில காலமாக அருட்சோதி இந்திய உளவுப் படையில் இணைந்து

**Global Printers**

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-767 8895

We Undertake the following work at reasonable rates:

PRINTING - SINGLE AND MULTI COLOUR
TAMIL & ENGLISH

Letter Heads, Business Cards,
Compliment Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

*Global Printers*

*For prompt service at reasonable rates*
*call us on 081-767 8895*

**OPEN SEVEN DAYS A WEEK**
**FROM 10.00a.m. to 5.00p.m.**